RECEIVED 26-8-1985 PERIODICALS DIVISION

விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 ஆவணி 10 ஜூலைகஜ் 9 இதழ் 197
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 26-8-1985

## 'உமா' டில்லியில்
### சமரசப்பேச்சு அடுத்த வாரம்?

(புதுடில்லி)

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகச் செயலதிபர் திரு. உமாமகேஸ்வரன் புதுடில்லியில் தங்கியுள்ளார்.

இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியைச் சந்தித்துப் பேசும் முயற்சியில் திரு. உமா மகேஸ்வரன் ஈடுபட்டுள்ளார். முன்பு வெளியான செய்திகள் தெரிவித்தது போல அவர் இந்தியாவைவிட்டு வெளியேறவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

[8-ம் பக்கம் பார்க்க]

## யாழ். நகரில் நடந்த கண்டன ஊர்வலம்!

(அலுவலக நிருபர்)

"இந்திய மத்திய அரசே! தமிழீழ விடுதலைப் போராளிகளை நாடு கடத்தாதே! அவர்களுக்குப் புகலிடம் அளியுங்கள்" என்ற வாசகம் பொறிக்கப்பட்ட திரைச்சீலையைத் தாங்கிக் கொண்டு நேற்று யாழ் மாவட்டத்தில் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களும் பொதுக் கூட்டமும் நடைபெற்றன.

திருநெல்வேலிச் சந்தியிலிருந்து நேற்றுப் பிற்பகல் 2 மணிக்கு பல நூற்றுக் கணக்கான பொதுமக்கள் ஒன்றுகூடி ஊர்வலம் ஒன்றை நடத்தினார்கள்.

இந்தப் பிரமாண்டமான ஊர்வலம் பலாலிவீதிவழியாகச் சந்தைச் மடச்சந்தியை அடைந்து பின்னர் அரசடி வீதிவழியாக நல்லூர் கோவில் சந்தியுடன் முடிந்தது.

ஆண்கள் பெண்கள், இளைஞர்கள் யுவதிகள் இந்த ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

ஊர்வலத்தில் சென்றவர்கள் சுலோக அட்டைகளைத் தாங்கிக்கொண்டு கோஷங்களை எழுப்பினர்.

(8-ம் பக்கம் பார்க்க)

# சென்னையில் பிரமாண்டமான ஆர்ப்பாட்ட ஊர்வலம்!

## லண்டனில் பாலசிங்கம்; சந்திரகாசன் நியுயோர்க்கில்

(சென்னை)

ஈழ விடுதலைப் போராளிகளை நாடு கடத்த இந்திய அரசாங்கத்தினால் பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவை வாபஸ் செய்யக்கோரி நேற்று சென்னையில் பிரமாண்டமான ஆர்ப்பாட்ட ஊர்வலம் இடம்பெற்றது.

தமிழ்ஈழம் ஆதரவாளர்கள் அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த ஊர்வலத்தில் இலங்கைத்தமிழ் போராளிகளுக்கு இந்தியாவில் குறிப்பாக தமிழகத்தில் புகலிடம் வழங்கப்படவேண்டும் என்று வலியுறுத்தப் பட்டது.

தி மு க தலைவர் மு. கருணாநிதி பொதுச் செயலாளர் திரு க அன்பழகன் காமராஜ் காங்கிரஸ் தலைவர் திரு. ப. நெடுமாறன், திராவிடக் கழகப் பொதுச்செயலா

(5-ம் பக்கம் பார்க்க)

## '26 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்"

(கொழும்பு)

திருக்கோயில் பகுதியில் தமிழ்த் தீவிரவாதிகளுக்கும், பந்தோபஸ்து படையினருக்கு மிடையில் நேற்றுக்காலை இடம் பெற்ற துப்பாக்கிச் சமரில் 26 தமிழ்த் தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர் என்று அரசு தரப்பில் அறிவிக்கப்பட்டது

பந்தோபஸ்து படையினர் பயிற்சி நடவடிக்கைகளை மேற்கொண்டு காட்டுப் பிரதேசத்திற்குள் சென்றபோது அங்கு தமிழ்த் தீவிரவாதிகளின் பயிற்சி முகாமொன்றை எதிர்கொண்டதாகவும். அப்பொழுது தீவிரவாதிகள்

(5-ம் பக்கம் பார்க்க)

## 'யாழ்தேவி' பயணிகள் நேற்று தாக்குதலிலிருந்து தப்பினர்?

(கொழும்பு)

பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டு மூன்று மணிநேர தாமதத்தின் பின்னரே யாழ் தேவி நேற்று யாழ்ப்பாணம் வந்தது.

வழமையாக பிற்பகல் 3-4 க்கு வந்து சேரும் யாழ் தேவி நேற்று 5-49 மணியளவிலேயே யாழ்ப்பாணம் வந்தது

தெற்கில் உள்ள சிலபுகையிரத நிலையங்களில் யாழ்தேவி ரயிலுக்கு அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டன என்றும் குண்டர்கள் யாழ்தேவியை தாக்கப் போவதாகவும் வெளிவந்த தக

(5-ம் பக்கம் பார்க்க)

## திருக்கோயில் சம்பவம்: மீனவர்கள் பலி!

(அட்டாளைச்சேனை)

திருக்கோயில் பகுதியில் ரோந்து சுற்றிச் சென்ற 'கொமாண்டோ'க்களைக் கண்டு பீதி அடைந்து ஓடிய மீனவர்களை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதில் நால்வர் ஸ்தலத்திலேயே பலியானதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இச்சம்பவத்தின்போது சுமார் 15 மீனவர்கள் கைதுசெய்யப் பட்டதாகவும்கூறப்படுகிறது.

திருக்கோயில் பகுதியில் நேற்று முந்தினம் மாலை மீன்வாடியிலிருந்து சுமார் 20 மீனவர்கள் மீன் பிடிப்பதற்காகச் சென்றுகொண்டிருந்ததாகவும் அவ்வீதியால் வாகனங்களில் வந்துகொண்டிருந்த 'கொமாண்டோப்'பிரிவினரைக் கண்டு

(5-ம் பக்கம் பார்க்க)

## சாரதி சுட்டுக்கொலை
### வவனியாவில் சம்பவம்

(வவனியா)

வவனியாவில் லொறிச் சாரதி ஒருவர் நேற்று முன்தினமிரவு துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார்!

யாழ்ப்பாணம் 'வி.எம். எஸ். லொறிச் சாரதி ஜெகதீஸ்வரனே பலியானவராவார்.

கொழும்பிலிருந்து பொருட்களுடன் வவனியா நகரத்தினூடாக வந்தபோது இச்சம்பவம் நடந்ததாகக் கூறப்படுகிறது

சாரதியின் சடலம் வவனியா ஆஸ்பத்திரி பிரேதச் சாலையில்

(5-ம் பக்கம் பார்க்க)

## "பொலிஸாரும், கமாண்டோக்களும் எமது வீடுகளை எரித்தனர்"
### அமைச்சர், டி. ஐ. ஜிடம் புகார்

(கொழும்பு)

"பொலிசாரும், கமாண்டோக்களுமே எமது வீடுகளை எரித்தனர்" என்று அமைச்சர் கே டபிள்யூ தேவநாயகம், பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிராங்கில்டா ஆகியோரிடம் வாழைச்சேனை, வந்தாறுமூலைப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் வாழைச்சேனை, வந்தாறுமூலைப் பகுதியில் சுமார் 350 வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன இச்சம்பவத்தையடுத்து இப்பகுதிக்கு கல்குடா எம் பி.யும் உள்நாட்டலுவல்கள் அமைச்சருமான கே. டபிள்யூ தேவநாயகம், பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிராங்கில்வா ஆகியோர் நேரில்சென்று நிலைமைகளைப்

(5ம் பக்கம் பார்க்க)

## பனம்பொருள் அபிவிருத்தி சபைத் தலைவர் கடத்தப்பட்டார்

(கல்வியங்காடு)

பனம் பொருள் அபிவிருத்திச்சபைத் தலைவர் திரு. க. நடராசா கடந்த சனிக்கிழமை இரவு இனந்தெரியாத இளைஞர்களால் கடத்திச் செல்லப்பட்டார். யாழ் நகரிலுள்ள பனம்

(5-ம் பக்கம் பார்க்க)

## 'இன்ரசிற்றி'யில் பயணிகள் நின்றவாறு பயணம்!

(யாழ்ப்பாணம்)

'இன்ரசிற்றி' கடுகதிரயிலில் யாழ்ப்பாணத்திலிருந்து நூற்றுக்கு மதிகமான பயணிகள் நேற்று கொழும்பு சென்ற

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளம்பரம்

## விற்பனைக்கு

மோரிஸ் மைனர் சீ எல் இருதவுகள் ரூபா 6000/-, குளிர் சாதனப் பெட்டி சிசில் ஆர்80 ரூபா 6000/- மாலை 5—6 மணி, ஸ்கந்தராசா, கனகரத்தினம் வீதி, வட்டுக்கோட்டை. 236

கோவில்களுக்கு தேவையான பெரியமணி, குத்துவிளக்கு, திருவாசி கிடாரம், குடம், சருவம், செம்பு, தீபம், தூபம், சரவிளக்கு, தாம்பாளம், ஃப்ளவர்வாஸ், மெழுகுதிரிஸ் ரேண்ட் வகைகள் மற்றும் அலுமினியம், பித்தளை எவர்சில்வர் அன்பளிப்பு பொருட்கள் ஆகியவற்றுக்கு: ஸம்ஸ் மெற்றல் ஸ்ரோஸ், 26,B, மானிப்பாய்வீதி, யாழ்ப்பாணம். 202

அளவெட்டி வடக்கில் தெல்லிப்பழை வீனான் ரேட்டில் (கூத்தன் சீமா) சந்தைக்கு முன்பாக வீட்டுடன் கூடிய 4½ பரப்பு சோமசுந்தரத்தின் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: ஆ.தி.விஜயநாதன், (சந்திரன் மாஸ்ரர்) இணுவில் மேற்கு. 231

## தேவை

குழந்தை பராமரிப்புக்கும் வீட்டு வேலைக்குமாக அனுபவமுள்ள பெண் பணியாள் வயது 18 — 45 தேவை. தொடர்பு: ஆ. தி. விஜயநாதன் (சந்திரன் மாஸ்டர்) இணுவில் மேற்கு. (230)

பகுதி நேர வகுப்புக்களில் Spoken English கற்பிக்கக்கூடிய ஆசிரியர் தேவை. நேரில் தொடர்பு கொள்க:- Institute of Technical and Studies V.C கந்தோர் முன்பாக, வட்டுக்கோட்டை. 237

## தவறிவிட்டது

சைக்கிளில் வரும் போது, முட்டாசுக்கடைச் சந்திக்கும் தட்டாதெரு சந்திக்குமிடையில் எனது 272991995 V இலக்க அடையாள அட்டை தவறிவிட்டது. ஒப்படைப்போருக்கு சன்மானம் வழங்கப்படும். சாகிப்பிள்ளை விஸ்வேஸ்வரன் (களபூமி, காரைநகர்) தற்போதைய விலாசம்: பாடசாலை ஒழுங்கை, கோண்டாவில் மேற்கு. 244

## சேவை

வெளிநாட்டுப் பிரயாண ஒழுங்குகள், தமிழ் ஆங்கில தட்டச்சு, ரேனியோ வேலைகள். அஞ்சல்வழி ஆங்கிலம், திருமண சேவை ஆகியனவற்றிற்கு-மல்ரிசேவிசஸ்: 37(351), மணிக்கூட்டு வீதி, (வெலிங்டன் தியேட்டர் சந்தி). யாழ்ப்பாணம், தொலைபேசி: 22762. 189

கொழும்பிற்கு வருவோருக்கு தங்குமிடம் நவீன வசதிகளுடன் உண்டு. கட்டணம் மிகக் குறைவு. விஜயம் செய்யவும். வோக் இன் கெஸ்ற் ஹவுஸ். (Guest House), 41/2, W. A. Silva மாவத்தை, வெள்ளவத்தை. (245)

## தேவை

பிராமண குரு ஒருவருக்கு, குடும்பத்துடன் இருந்து பூசை செய்வதற்கு கோயில் தேவை. தீவுப்பகுதி தவிர்ந்த ஏனைய பகுதிகள் விரும்பத்தக்கது. தொடர்பு: விளம்பர இல: 240 C/o ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம். 240

## வைத்தியம்

மூலவியாதிகள், பாரிசவாதம், முழங்கால் வாதம் போன்ற வாதரோகங்களுக்கும் பீனிசம், எக்ஸிமா, சருமவியாதிகள், தொய்வு, கண் ரோகங்கள், நரம்புத்தளர்ச்சி, மாதவிடாய் கால உபத்திரவங்கள், குழந்தைப் பேறின்மை, குழந்தைகள் சம்பந்தமான சகல வியாதிகளுக்கும் இந்த ஆயுர்வேத முறைப்படி விஷேசமான சிகிச்சை பெறலாம், Dr. மங்களாம்பிகை D.A.M, மங்களபதி வைத்தியசாலை, 41/5, அரசவீதி, சங்கிலியன்வீதி, நல்லூர். (4882

## காணவில்லை

### செல்லத்துரை சபாநாயகம்



தெல்லிப்பழையைவதிப்பிடமாகக் கொண்ட இவரை கடந்த இரண்டு மாதங்களாகக் காணவில்லை. வயது 65. இவரைக் கண்டவர்களோ அல்லது தகவல் தெரிந்தவரோ கீழ்க்கண்ட விலாசத்துடன் தயவுசெய்து தொடர்புகொள்ளவும்.

திருமதி பொ. சபாநாயகம்,
மகாதனை, தெல்லிப்பழை. (235)

## 5வது ஆண்டு நினைவஞ்சலி

அமரர் க. கதிர்காமசேகரர் ஜே, பி, யு. எம்.
(பிரபல சட்டத்தரணியும் நொத்தாரிசும்)
சாவகச்சேரி.

மலர்வு: 1907–01–24

உதிர்வு: 1980–08–26



ஆண்டுகள் ஐந்து கடந்தும் உங்கள் நினைவு எம் உள்ளங்களை விட்டகலவில்லை. தங்கள் ஆத்மா சாந்தியடைக.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
''திருவேரகம்''.
சரசாலை-சாவகச்சேரி. 234

## 5வது பிறந்ததின வாழ்த்து



செல்வன்
குமரகுருசாமி
ராஜேந்திரபிரசாத்

வல்வெட்டித்துறை ஆலடி ஒழுங்கையைச் சேர்ந்த குமரகுருசாமி தம்பதிகளின் செல்வப்புதல்வன் இன்று தனது 5-வது பிறந்த நாளை தனது இல்லத்தில் குதூகலமாகக் கொண்டாடுகின்றார். இவரை:

ஐயா, அம்மா, தங்கைகள், சிவலக்ஷ்மி, பிரகலதா, அப்பா ஆகியோர் அன்னுவை சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றார்கள்.

## எமது புதிய வெளியீடுகள்

i மயூரி [Thomsun]
சுபாகர் - சுதா

ii அடுத்தாத்து அல்பிரட் [V.G.P.]
பிரபு - ஊர்வசி

iii ஆலய தீபம் [V.G.P.]
ராஜேஷ் - சுஜாதா

iv தண்டனை விஜயகாந் - அம்பிகா

v தவம் லஷ்மி - ராம்குமார்

மேலும் வேறு புதிய வெளியீடுகள்

**நல்லூர் வீடியோ சென்ரர்,**
முத்திரைச்சந்தை, நல்லூர். [242]

## 31ம் நாள் நினைவுமலர்

### கனகசபாபதி மகேந்திரன்



தோற்றம்: 07–12–1968

மறைவு: 27–07–1985

எங்கள் குடும்பத்துக்கே ஒரேயொரு ஆண்மகனாய் அவதரித்த எங்கள் செல்வமே!
உங்கள் மலர்ந்த முகமும் அன்பு மொழியும்
இனி என்று காண்போம் என ஏங்குகின்றோம்.
மனத்தை விட்டகலா மாசிலாக் குலவிளக்கே
உம்மை பிரிந்து 31ம் நாள் ஆயதுவே.

உங்கள் பிரிவால் ஏங்கித் தவிக்கும்:

அம்மா, அப்பா, சகோதரிகள், அம்மம்மா, அம்மப்பா, மாமன்மார், மாமிமார், சித்தப்பாமார், சித்திமார், மைத்துனர்மார், மைத்துனிமார், மற்றும் பந்துக்கள்

அனைவரும் உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகிறோம்.
இருபாலை ரோட், கோப்பாய். 239

## பல தரப்பட்ட பயிற்சி நெறிகள்

புதிய பதிவாளரின் நேரடி மேற்பார்வையின் கீழ் உள்ளூரிலும் வெளியூரிலும் வேலை வாய்ப்பை பெறுவதற்கு ஏற்றவாறு பின்வரும் பாடநெறிகள்

1-9-85 இல் ஆரம்பம்

★ DIPLOMA IN NURSING
★ DIPLOMA IN PHARMACIST
★ DIPLOMA IN MOTOR MECHANISM
★ DIPLOMA IN WELDING
★ DIPLOMA IN PLUMBING
★ வீட்டு மின் இணைப்பு (ELECTRICAL HOUSE WIRING)

இத்துடன்

**G. C. E. [Adv. Level] 1986**

பிரயோக கணிதம் } T. KANGES
தூய கணிதம் }
கணக்கியல் — ACCOUNTS
வர்த்தகம் — COMMERCE
பொருளாதாரம் — ECONOMICS

**G. C. E. [Ord. Level] 1986**

சகல பாடங்களும் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சியாளர்களினால் நடாத்தப்படும்.

**North Ceylon Technical Institute**
14, St. Peters Lane,
Hospital Rood, Jaffna.

வட இலங்கை டெக்னிக்கல் இன்ஸ்ரிரியூட்
14. சென்ற் பீற்றர்ஸ் லேன்,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
247

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மே. ஜேர்மனி உளவுத்துறை அதிகாரி கி. ஜேர்மனியில் தஞ்சம்!

பேர்லின், ஆகஸ்ட் 25

மேற்கு ஜேர்மனியின் உளவுத்துறையைச் சேர்ந்த சிரேஷ்ட அதிகாரி யொருவர் கிழக்கு ஜேர்மனியில் அரசியல் அடைக்கலம் புகுந்துள்ளார்.

கென் ஜோக்கின் ரீச் என்ற இந்த மேற்கு ஜேர்மன் உளவுத்துறை அதிகாரியே கிழக்கு ஜேர்மனியில் அரசியல் அடைக்கலம் புகுந்தவர் ஆவார்.

இவர் கிழக்கு ஜேர்மனியில் அரசியல் அடைக்கலம் புகுந்திருப்பது மேற்கு ஜேர்மனியில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. மேற்கு ஜேர்மனியின் இராணுவ இரகசியங்கள் பலவற்றை அறிந்திருக்கும் இந்த உளவுத்துறை அதிகாரி தற்போது கிழக்கு ஜேர்மனியில் அரசியல் அடைக்கலம் புகுந்திருப்பதினால் மேற்கு ஜேர்மனியின் இராணுவ அரசியல் இரகசியங்கள் கிழக்கு ஜேர்மனிக்கும் கிடைக்கும் என நம்பப்படுகிறது.

இந்த உளவுத்துறை அதிகாரி கிழக்கு ஜேர்மனியில் அடைக்கலம் புகுந்திருப்பதினால் ஏற்படும்நிலையை ஆராய்வதற்காக மேற்கு ஜேர்மன் அதிகாரிகள் பல கூட்டங்களையும், ஆலோசனைகளையும் நடத்தி வருகின்றனர்.

முன்னர் ஒரே நாடாக இருந்த ஜேர்மனி இரண்டாம் உலகப் போரின் பின்னர் இரண்டாகப் பிரிந்து மேற்கு ஜேர்மனி முதலாளித்துவ நாடாகவும் கிழக்கு ஜேர்மனி கம்யூனிச நாடாகவும் மாறியமை குறிப்பிடத்தக்கது.

## ஜெனிவாவில் லலித் கருத்து:

# அரசியல் தீர்வில் இலங்கை உறுதியாம்

(ஜெனிவா)

இலங்கையின் இனப் பிரச்சனைக்கு அரசியல் தீர்வு ஒன்று காணத் தமது அரசு உறுதி கொண்டிருப்பதாக இலங்கை தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு லலித் அத்துலத்முதலி ஜெனிவாவில் கூறியிருக்கிறார்

ஜெனிவாவில் நேற்று நடந்த பத்திரிகையாளர் மகாநாட்டில் பேசிய அமைச்சர் திரு லலித் அத்துலத் முதலி வன்முறை மீண்டும் ஏற்பட்டு பேச்சுவார்த்தைகள் தடைப்பட்ட போதிலும், தமிழ்ப் போராளிகளுடன் அரசியல் தீர்வு காண அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப் படும் என்று கூறினார்.

லண்டனுக்கு அரசமுறைப் பயணம் மேற்கொண்ட அமைச்சர் லலித் அத்துலத் முதலி தாயகம் திரும்பும் வழியில் ஜெனிவா சென்றிருந்தார். (க)

## யாழ். பெரியாஸ்பத்திரியில் இரத்த கையிருப்பின்மையால்

# அவசர சிகிச்சைகள் பாதிப்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ். பெரியாஸ்பத்திரியின் இரத்த வங்கியில் அண்மைக் காலங்களில் ஏற்பட்டுள்ள இரத்தத் தட்டுப்பாட்டினால் அவசர சத்திர சிகிச்சைகள், விபத்து சத்திரசிகிச்சைகளை மேற்கொள்ளமுடியாத பெரும் பாதிப்பு நிலைமை தோன்றியுள்ளது இந்த அவல நிலைமையைப் போக்க பொதுமக்கள் உதவவேண்டுமென இரத்த தான செயற்குழுத் தலைவரும் லயன் வலயத் தலைவருமான டாக்டர் ரி பகீரதன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்த வேண்டுகோளில் மேலும் டாக்டர் பகீரதன் தெரிவித்துள்ளதாவது. ''அவசர சத்திர சிகிச்சைகள், விபத்து சத்திரசிகிச்சைகள் அதிகரித்துள்ள இன்றைய சூழ்நிலையில் போதியளவு இரத்தம் கையிருப்பில் இருப்பது அவசியமாகின்றது. ஆனால் துரதிஷ்டவசமாக இரத்தவங்கியில் ஏற்பட்டுள்ள இரத்தக் கையிருப்பு குறைவை உடன் நீக்க இளைஞர்கள், யுவதிகள் முன்வந்து உதவவேண்டும்.''

இரத்ததானம் வழங்க முன்வருவோர் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறும் அதற்கான வசதிகளை ஏற்படுத்தித்தரத் தாம் தயாராகவுள்ளதாகவும் டாக்டர் பகீரதன் தெரிவித்துள்ளார். (ச)

# முஸ்லிம் வர்த்தகர் கடத்தப்பட்டார்

(கல்வியங்காடு)

யாழ்ப்பாண வர்த்தகரும் ஐந்து சந்தி 'பிளவின் கிறீம் ஹவுஸ் உரிமையாளரும், யாழ். ஜும்மா பள்ளிவாசல் பரிபாலனசபைத் தலைவருமான ஜனாப் எம். எல். எம். லாபீர் கடந்த வெள்ளிக்கிழமை இரவு அவரது ஐந்து சந்திக் கடையில் வைத்து இனந்தெரியாத ஆயுதம்தாங்கிய நபர்களினால் கடத்திச் செல்லப்பட்டார்.

இதுவரை இவர் விடுவிக்கப் படவில்லை. எக்காரணத்துக்காக கடத்தப்பட்டார் என்பது தெரியவில்லை.

யாழ் முஸ்லிம்கள் மத்தியில் இக்கடத்தல் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதாகவும் கடத்தியவர்கள் மனிதாபிமானமுறையில் விடுதலை செய்யவேண்டும் எனவும் ஜும்மா பள்ளிவாசல் நிர்வாகிகளும், மக்களும் வேண்டுகோள்விடுக்கின்றனர்.

## ''சித்திரவதை செய்து கொன்றபின்

# இளைஞர் தப்பிஓடும்போது சுட்டதாக கூறுகிறார்கள்''

## அரசு மீது 'புளட்' குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

'திம்பு' பேச்சுவார்த்தையின் போது குற்றச்சாட்டுகளும், சாட்சியங்களுமின்றி பணயக் கைதிகளாக பிடித்துவைத்துள்ள சகல தமிழ் பேசும் இளைஞர்களையும், விடுதலை செய்ய ஆரம்பித்துள்ளதாக உலகையும், தமிழ்பேசும் மக்களையும் ஏமாற்றிய அரசு இன்று போராடும் தமிழ் பேசும் இளைஞர்களை சித்திரவதைசெய்த கொன்றுவிட்டு தப்பி ஓடும்போது சுட்டுவிட்டதாகப் பிரகடனப்படுத்தும் உபாயத்தை நடைமுறைப் படுத்திவருகிறது.

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் நேற்று முன்தினம் வெளியிட்ட துண்டுப்பிரசுரத்தில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது

அத்துண்டுப் பிரசுரத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

நீண்டகாலமாக தங்காலையிலும் பூஸாவிலும் ஏனைய சிறைக் கூடங்களிலும் இராணுவ முகாம்களிலும் காவல் நிலையங்களிலும் நமது இளைஞர்கள் பலர் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு விசாரணையின்றி சிறை வைக்கப்பட்டுள்ளனர்

நாடும் உலகும் அறியாதவாறு அன்றாடம் பல சிறை முகாம்களில் தமிழ்பேசும் இளைஞர்கள் துன்புறுத்திக் கொல்லப்படுகின்றனர் தங்காலைச் சிறையில் சாதவீக அடிப்படையில் உண்ணாவிரதத்துக்கு ஏற்பாடுகள் செய்துவந்த ஆறு தமிழ்பேசும் இளைஞர்கள் படுகொலை செய்யப் பட்டனர். இவர்கள் தப்பிஓடியபோது கொலை செய்யப்பட்டதாகவும் அரசின் செய்தித்தாபனங்கள் பறைசாற்றியுள்ளன

இத்தகைய கொடுமைகளுக்கு ஆளாகும் இளைஞர்கள் குறிப்பிட்ட எந்தச் செயல்களின் அடிப்படையிலும் கைது செய்யப்பட்டவர்களல்ல தமிழைப் பேசுவதே அவர்கள் இழைத்த குற்றமாகும்.

தமிழீழ மக்களது விடுதலைப் போராட்டத்தை அரசியல் ரீதியாக அணுகவும் இராணுவ ரீதியாக எதிர்நோக்கவும் திராணியற்ற பௌத்த சிங்கள பேரினவாத அரசு, குற்றமற்ற தமிழ்பேசும் இளைஞர்களைக் கொல்வதன் மூலமும் ஆயிரக் கணக்கில் கைதுசெய்து பணயக் கைதிகளாக வைப்பதன் மூலமும் நமது தேசிய இனத்தைப் பணியவைக்க முயல்கின்றது.

உலகின் எல்லா விடுதலைப் [illegible] நாட்டின் [illegible] இறைமதில்களுள் பிடித்து அடைத்து விடலாமென்றும், சொன்றொழித்து விடலாமென்றும் கனவு கண்டதுண்டு, பிரான்சுப்புரட்சியின் பஸ்டில் சிறைத்தகர்ப்பிலிருந்து நமது நாட்டிவிடம்பெற்ற மட்டக்களப்பு சிறைத்தகர்ப்பு வரை சிறைமதில்களல்ல, மக்களே வெற்றி பெற்றனர்.

வடஅயர்லாந்து சிறையில் பொபி சாண்ஸ் உண்ணாவிரதமிருந்தபோது வட அயர்லாந்தின் வெகுஜனங்கள் கிளர்ந்தெழுந்து அவர்களுக்கு ஆதரவாகப் போராடியமையையும் சிறையில் வைத்தே அவரைத் தமது பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்தமையும் உலகறியும்.

தமிழீழ மக்களும் தமிழீழ விடுதலை ஸ்தாபனங்களும் சர்வதேசமும் சிதறி வாழும் சகல தமிழீழ மக்களையும், அகில உலக மக்களையும், குறிப்பாகத் தென்னிலங்கையிலும், தமிழகத்திலும், இந்தியாவிலுமுள்ள முற்போக்கு சக்திகளையும் அணிதிரட்டி தேசிய மட்டத்திலும், சர்வதேச மட்டத்திலும் சிறைக் கொடுமைகளை மீறி நீங்கும் சமத்துவத்திற்குமாகப் போராடும் குற்றமேதுமற்ற இளைஞர்களுக்குக் குரல் எழுப்புவோமாக

## திம்புவில் இப்படியும் சோதனை!

(புதுடில்லி)

திம்புவில் இடம்பெற்ற இலங்கைத்தமிழர்பிரச்னை தொடர்பான மகாநாட்டில் கலந்து கொள்ளச் சென்ற பிரதிநிதிகள் அனைவரும் ஆயுதங்கள் வைத்திருக்கிறார்களாவென பரிசோதிக்கப்பட்ட பின்னரே மகாநாட்டு மண்டபத்துக்குள் விடப்பட்டதாக செய்தி கிடைத்துள்ளது

மகாநாட்டில் கலந்து கொண்ட தமிழ்-சிங்களப் பிரதிநிதின் உலோகப் பொருட்களைக்கண்டுபிடிக்கும் யந்திரத்தில் பரிசோதனைக்குட்படுத்தப்பட்ட பின்னரே மண்டபத்துக்குள் போக அனுமதிக்கப் பட்டனராம்.

## சீ-நோர் நிறுவனமோசடி:

# விசேடகுழு விசாரணைசெய்யும்

## பாராளுமன்றத்தில் அமைச்சர்

(கொழும்பு)

''சீ-நோர் நிறுவனத்தில் இடம்பெற்ற மோசடி குறித்து ஆராய விசேட விசாரணைக் குழு ஒன்று அமைக்கப்படும்'' என்று கடற்றொழில் அமைச்சர் திரு பெஸ்டஸ் பெரேரா பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

'சீநோர்' நிறுவனத்தை சுவீகரிப்பது தொடர்பாகப் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்

''சீநோரில் பெருந்தொகைப் பணம் மோசடி செய்யப்பட்டுள்ளது. சொத்துக்கள், சொந்தப்பாவனை என்பன நம்பிக்கையின் பெயரில் வழங்கிய உயர் பதவிகளை பயன்படுத்தியே மோசடி செய்யப் பட்டன. 'சீநோர்' நிறுவனம் மக்கள் வங்கிக் கடன் மற்றும் நோராட் வங்கிக் கடன் ஆகியவற்றைத் திருப்பிக் கொடுக்கவில்லை. அத்தோடு ஐனைபதி தேர்தல் நிதியத்திற்கு சீநோர் நிறுவனம் ஒருகோடியே ஐம்பது லட்சம் ரூபா வழங்கப்பட்டது என்பதில் உண்மையில்லை'' என்றும் அமைச்சர் தெரிவித்தார்

அத்தனகலை எம் பி லஷ்மன் ஜெயக்கொடி பேசுகையில் சீநோர் மோசடியை விசாரிப்பதில் ஈடுபட்டிருக்கும் இரகசியப் பொலிசாரின் நடவடிக்கைகளை இடைநிறுத்துவதற்கு சிலர் முயற்சி செய்கிறார்கள் என்று கடற்றொழில் அமைச்சர் தெரிவித்திருப்பது பாரதூரமான விஷயமாகும் என்றார்.

இதில் தலையிடுவோர் யார் என்பதை அவர் சபையில் பிரஸ்தாபிக்க வேண்டும் அத்தோடு இது பற்றி [illegible] வேண்டும் என்றும் [illegible]யுறுத்தினார்.

## புதிய மடம் அமைக்கப்படும்

(கோப்பாய்)

கோப்பாய் வடக்கு சந்தைக்காடு மயான புதிய மடத்துக்கான அத்திவாரக்கல் கோப்பாய் வடக்கு கிராமமுன்னேற்றச்சங்கத் தலைவர் திரு. வெ. சுப்பிரமணியத்தினால் நாட்டப்பட்டது.

இதற்கான நிதி இவ்வருடத்துக்கான உள்ளூராட்சி அபிவிருத்திநிதியிலிருந்து ஒதுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## சீனாவில் நில அதிர்ச்சி 55 பேர் பலி

(பீக்கிங்)

சீனாவில் சோவியத்எல்லைக் கருகிலுள்ள நகரமொன்றில் ஏற்பட்ட நிலஅதிர்ச்சியில் 55 பேர்பலி யானார்கள்.

இப் பகுதியில் எண்பத்தைந்து வீடுகள் இடிந்து வீழ்ந்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (து)

## குண்டு வெடிப்பு: ஒருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

கொடிகாமத்தில் நேற்று முன்தினம் நண்பகல் பலத்த சத்தத்துடன் குண்டுஒன்று வெடித்தது.

இச்சம்பவத்தினால் ஒருவர் காயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதாக கூறப்படுகிறது. (க)

## முல்லைத்தீவில் எரிபொருள் தட்டுப்பாடு

(முல்லைத்தீவு)

புதுக்குடியிருப்பு முறுகண்டி ஆகிய இடங்களில் வைத்து முல்லைத்தீவு பலநோக்குக்கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தமான எரிபொருள் கொள்ளையடிக்கப்பட்டதை தொடர்ந்து முல்லைத்தீவு பகுதியில் எரிபொருளுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

வயதானவள், ஏழை, தள்ளாதவளானாலும், பிள்ளைகளே! யாருக்கோ அவள் தாய்! தெரியுமா

— மேரிடே ஏ பிரைன்

# நமது நோக்கு

## இந்தத் தொப்பி உங்களுக்கு பொருந்துமா?

இலங்கை அரசின் ஆதரவில் வெளிவரும் பிரபல பத்திரிகை ஒன்றில் வெளிவந்த விளம்பரத்தின் விளைவே எங்கள் இன்றைய தலையங்கம்

இலங்கை ராணுவத்துக்கு இன்று புயபலம் படைத்த விவேகமுடைய தேசப்பற்று நிறைந்த வீரர்கள் தேவை யென்றும். ராணுவ கமிஷன் அதிகாரிகள் என்ற பதவிக்கு தகைமையுடையவர்களே உடனடியாக விண்ணப்பிக்கவேண்டுமென்றும் இந்த விளம்பரம் கூறுகின்றது. தொப்பியின் அழகும் விளம்பரத்தை பொலிவுபடுத்துகின்றது. தேசப்பற்றுள்ள இளைஞர்கள் 19 1/2 — 22 வயது எல்லைக்குட்பட்ட கல்வித் தகைமையுடையவர்கள் ஜீ. சி. ஈ சாதாரணத்தில் சிங்களம் அல்லது தமிழ் கட்டாய சித்தியுடையவர்களாக இருக்கவேண்டுமென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

விவாகமாகாத இந்த இளைஞர்கள் இங்கோ அல்லது வெளிநாட்டிலோ பயிற்சி அளிக்கப்பட்டு இரண்டாவதுலெப்டினன்ட் பதவிக்கு நியமிக்கப்படுவாரென்றும் சொல்லப்பட்டுள்ளது.

நாட்டின் பாதுகாப்புக்கும் தகுதியான இளைஞருக்கும் இது ஒரு முக்கிய வாய்ப்பு என்பதில் ஐயமில்லை.

இன்றையநிலையில் இவ்வித விளம்பரம் எழுப்பும் சர்ச்சை சாதாரணமானதல்ல.

நாட்டின் அபிவிருத்திக்கு பிரதானமான கொத்மலைத் திட்டம் முடிவடைந்ததைக் கொண்டாடும் சிறப்பு மலரிலேயே இந்த விளம்பரம் காணப்படுகிறது.

அபிவிருத்திக்குழைக்க வல்ல இளைஞர் பட்டாளம் உடனடியாக ராணுவ சேவைக்கும் அழைக்கப்படுகிறது.

இதில் என்ன முரண்பாடு என்று எவரும் கிண்டல் செய்யலாம். நாட்டின் பிரதமரே இரண்டுக்கும் இடமளித்திருக்கிறார். போர் என்று நாய்கள் குரைக்கட்டும்; அபிவிருத்தி என்னும் பாலைவனப் பயணம் தொடரட்டுமென்பதே அவரின் கருத்து.

நாட்டைப் பாதுகாக்க வல்ல இளைஞர்கள், சிங்கள தமிழ் இனங்களில் காணப்படுகின்றனர்; இனவேறுபாடில்லை என்பதைக் குறிக்கவே தேசியமொழி ஒன்று கட்டாயமாக்கப்பட்டிருக்கிறது

உண்மை நிலை என்ன?

எத்தனை தமிழ் இளைஞர்கள் இந்த விண்ணப்பத்தை ஏற்று நாட்டின் ராணுவ சேவையில் சேர்வதற்கு விரும்புவார்கள்?

விடை தேவையற்ற வினா இது.

இன்று தமிழ்ப்போராளிகளாலேயே பாதுகாப்பு பிரச்னை எழுந்திருக்கிறது அதனை முறியடிக்க ராணுவ பலம் தேவைப்படுகிறது. இதுவே போரின் மர்மம். ஒரு தாயின் இரு சகோதரர் ஒருவரை ஒருவர் கொல்லும் பயிற்சி.

நாட்டின் அபிவிருத்திக்கும், இவ்வித ராணுவ சேவைக்கும் எட்டாம் பொருத்தமென்பதை அறியாதவர் எவருமுண்டா. தேசப்பற்றென்ற சிறந்த பண்பைஇரண்டாகப்பிளக்கும் திட்டமும் இது என்பதை அரசும் மக்களும் நன்கறிவர்.

அறிந்தும இந்தத் தற்கொலை போன்ற முரண்பாட்டை நீக்க யார் முன்வருவார்?

நாட்டின் பொதுமக்கள் இன்றைய கால கட்டத்தில் இலங்கை போன்ற சுதந்திர நாடுகளில் இவ்வித சூழ்நிலையில் சிக்குண்டிருப்பதை நாம் பார்க்கிறோம்.

இது பொதுமக்கள் யுகம் என்று வாயளவில் சொல்வது எமது காதில் அடிக்கடி விழுகின்றது; அர்த்தமற்ற பதம் அது என்பது இன்று தெளிவாகின்றது.

இங்கு வாழும் அப்பாவி மக்கள் எந்த இனத்தவர் மதத்தவரென்றாலும் 'பாதுகாப்புத்தாருங்கள்' என்று விழுந்தடித்துக் கொண்டு சரணடைவதைக் காணாதவர் யார்?

இந்த நிலையில் ராணுவ சேவை அவசியமாகிறது; போதிய ஆதரவு விளம்பரத்துக்கு இல்லையாகில் கட்டாய ராணுவசேவை பிரகடனப் படுத்தப்படும்.

தமிழ் இளைஞர்களுக்கு அந்தக் கட்டத்திலும் வாய்ப்பில்லை. அவர்கள் 'பகைவர் அணி' என்பதே காரணம்.

தமிழர் பிரச்னை தீர்க்கப்பட்டால் இலங்கை ராணுவத்தின் பெருமை எவ்வாறிருக்கும்? ஏன் பலத்த ராணுவம் தேவைப்படுமா?

இளைஞர்கள் எவரும் இயல்பாகவே ஒற்றுமைப்பட்ட போக்குடையவர்கள். சிங்கள-தமிழ் பிணக்கின்றேல், இலங்கையின் இளைஞர் பட்டாளம் இச்சிறு நாட்டை பொன் கொழிக்கும் நாடாகச் செய்யமுடியும். அதற்குரிய தொப்பி வேறு.

அந்த மகோன்னத நிலைக்கு நாடு முன்னேற அதற்குரிய ஆட்சி செயற்படவேண்டும். பொதுமக்களின் புரட்சி நிலையைப் புரிய வல்ல ஆட்சி மக்களை பிளவுபடுத்தாது ஒற்றுமைப்படுத்த முயலும். எனவே இந்தத் தொப்பி எமக்கு எவ்வாறு பொருந்தும்?

## ஸ்ரீகற்பகவிநாயகர் திருவிழா

(யாழ்ப்பாணம்)

பன்னாலை வரத்தலம் ஸ்ரீ கற்பகவிநாயகர் ஆலய [illegible] யேற்றம் அடுத்தமாதம் [illegible] திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது. 14-ம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த் [illegible] வுள்ளது.

---

★ உலக அரசியல் அரங்கு — அரசியல் அவதானி

# தென்பசுபிக் நாடுகளைப் பாதிக்கும் இரு பெரும் வல்லரசுகளின் போட்டி

இன்றைய உலகில் நாடுகளுக்கிடையே தொடர்புகள் அதிகரித்துவருகின்றன பொருளாதாரத்தைவிட தொழில் நுட்பமும், அரசியலைவிட ராணுவமும் ஆதிக்கம் செலுத்தும் காரணிகளாக உள்ளன. இன்று மனிதன் வாழும் சூழல் முற்றாகவே வேறுபட்டுக் காணப்படுகின்றது இந்நிலையில் கடந்தகால சித்தாந்தங்கள் இன்றைய உலகினை விளங்கிக்கொள்ளப் போதுமானவையல்ல.

இந்த உண்மை தென் பசுபிக் பிராந்திய நாடுகளில் பிரபலம் பெற்றிருக்கிறது. 2ம் உலக யுத்தத்தில் ஜப்பானைத் தோற்கடித்த அமெரிக்கா தென்பசுபிக் பிராந்தியத்தில் பெருஞ்செல்வாக்குப் பெற்றிருந்தது. பலசிறிய தீவுகளைக் கொண்ட இப்பிரதேசம் பெரிய வல்லரசுகளின் தலையீடின்றி அமைதியாக வாழ்ந்துவந்தன. ஆனால் இன்று நிலைமை அதிகம்மாறியிருக்கிறது. அணு ஆயுதப் போட்டியும் அதனால் ஏற்படக்கூடிய அபாயமும் தென் பசுபிக் பிராந்தியத்தில் உள்ள 13 நாடுகளைப் பெரிதும் கலக்கி வருகிறது. அவை ஒன்று திரண்டு அமெரிக்காவின் அணு ஆயுத ஆதிக்கத்தைத் தடுக்க ஒரு சம்மேளனத்தை உருவாக்கியிருக்கின்றன.

அவுஸ்திரேலியா, நியூஸிலன்ட் ஆகிய இருபெரும் அரசுகளின் தலைமையில் 230 லட்ச மக்கள் வதியும் 13 நாடுகள் இச்சம்மேளனத்தில் பிரதிநிதித்துவம் பெற்றிருக்கின்றன.

அண்மையில் நடைபெற்ற மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தென்பசுபிக் பிராந்தியத்தில் அணு ஆயுதங்கள் உற்பத்தி செய்யவோ, நிறுத்திவைக்கவோ, பரிசோதனை செய்யவோ தடைவிதிக்கிறது.

கடந்த மார்ச் மாதம் நியூஸிலன்ட்பிரதமர் டேவிட்லாங் அணு ஆயுதந்தாங்கிய அமெரிக்க கப்பல்கள் தமது தேசத்தின் கடலில் பிரவேசிக்கப் படக்கூடாதென்றும், அந்த நிபந்தனைக்கமையும் கப்பல்கள் துறைமுகத்துள் அனுமதிக்கப் படுமென்று கட்டளையிட்டார். இச்சிறு தேசம் அமெரிக்காவை கிடுகிடுக்க வைத்ததை அமெரிக்காவுக்கு ஆத்திரம் ஊட்டியிருக்கிறது.

இந்த மாநாட்டில் நிறைவேறியதீர்மானம் பூரண அங்கீகாரம் பெற்று உடனடி நடைமுறைக்கு வருமென எதிர்பார்க்கலாகாது. ஆனால் சோவியத் ரஷ்யாவின் ராணுவ பலத்தையும்மதிப்பிட்டு இந்த அணி சேராக்கொள்கை உதயமாகின்றது.

அமெரிக்காவின் நிதியுதவியில் பல சிறிய நாடுகள் இன்றும் தங்கியிருக்கின்றன. அதே சமயம் கம்யூனிஸ்ட் ரஷ்யா இந்தப் பிராந்தியத்தில் அதிகாரம் ஊடாடி வருகின்றது மீன்வளத்தில் சிறந்த இச்சிறு நாடுகளுக்கு அமெரிக்காவிலும் பார்க்க அதிக உதவி அளித்து வருகிறது கம்யூனிஸ்ட் சீனு தனது தொடர்புகளை இங்கு விரிவாக்குகின்றது. பிரான்ஸ் தனது குடியேற்ற நாடாகிய நியுகலெடோனியாவுக்கு கூடிய சுயநிர்ணயம் அளிக்க முன்வந்துள்ளது.

வெளிஉலக விவகாரங்கள் இப்பிராந்தியத்தில் அமைதியீனத்தை உண்டு பண்ணிய போதும், ஒவ்வொரு சிறு நாடும் பொருளாதார சீர்கேட்டால் நலிவுறுகின்றது. உணவுக்குரிய விவசாயவிருத்தியை விட்டு பொருள்தேடும்தொழில் வளத்தில் அளவு கடந்த ஊக்கம் காட்டியதால், சர்வதேச மார்க்கெட்டிலே வீழ்ச்சியால் பலசிறிய நாடுகள் பாதிப்படைந்திருக்கின்றன. இந்த வீழ்ச்சியைப் பயன்படுத்தி சோவியத் ரஷ்யா பல நாடுகளின்மாபெரும் மீன்வளத் திட்டத்துக்கு பாரிய உதவி செய்யமுன்வந்துள்ளது சோவியத் ரஷ்யா தன் உதவியை இங்கு அதிகரித்திருப்பது அமெரிக்காவுக்குக் கவலை அளிக்கிறது

ஐக்கிய அமெரிக்கா இது வரை இந்த நாடுகளுக்கு வருடந்துக்கு 55 லட்சம் டாலர்கள் உதவியளித்து வந்தது

இனிமேல் இதனை அதிகரிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

## நியூஸிலன்ட்

அணுகுண்டு ஒழிக்கும் சர்வதேச இயக்கத்தில் நியூஸிலன்ட் மிக உற்சாகமாக பங்கு பற்றுகிறது, இந்த இயக்கத்தின் பெயர் 'கிறீன்பீஸ் (Green Peace). அதற்குச் சொந்தமான கப்பல்தென் பசுபிக் பிராந்தியத்தில் உள்ள முறுரோ (Mururoa) என்னுமிடத்தில் பிரான்ஸ் நடத்துகின்ற அணுவாயுதப் பரிசோதனை நிலையத்துக்கு ஒரு 'சமாதான கடற்படையை'க் கொண்டு செல்ல ஆயத்தம் செய்து கொண்டிருந்தது. இக்கப்பல் - அதன் பெயர் "ரெயின்போ வாரியர் (Rainbow Warrior), கடந்த மாதம் 10 ம் திகதி ஒக்லன்ட் துறைமுகத்தில் நிறுத்தப்பட்டிருந்த போது இருவர்-தம்பதிகள் என்று கூறப்படுகிறது - அக்கப்பலில் குண்டு வைத்ததாகச் சொல்லப்பட்டது. அது கப்பலைத் தகர்த்ததோடு ஒரு மாலுமியையும் கொன்றது.

பாரிஸின் பிரபல பத்திரிகை ஒன்று இச்செய்தியை விளாசினதோடு, இந்த நாச வேலைக்கு பிரான்ஸின் உளவு ஆய்வு நிறுவனம் டீ. ஜீ எஸ். ஈ. (D. G. S E) - அமெரிக்காவின் C.I.A. ரஷ்யாவின் K G B போன்றது - இச்செயலுக்கு பொறுப்பென்று எழுதிவிட்டது. பிரான்ஸ், பசுபிக்தீவில் நடத்தும் ரகசிய அணுகுண்டு திருவிளையாடல்களை எவரும் பார்த்து விடக்கூடாதென்பதே குண்டின் நோக்கம் என எழுதியது? என்னே! பத்திரிகை தர்மத்தின் தனிப்போக்கு!

ஜனாதிபதி மித்திரான்ட் ஒரு பாரபட்சமற்ற கடும் விசாரணை நடத்தி குற்றவாளிகள் தண்டிக்கப்படவேண்டுமென்று கட்டளை பிறப்பித்திருக்கிறார். குற்றஞ்சாட்டப்பட்டு சென்ற வாரம் நீதிமன்றத்தில் விசாரணைக்குட்படுத்தப்பட்டவர்கள் பிரெஞ்சு ராணுவக்கப்டின் - கினோர் துரங்கே என்ற பெண்மணியும் அவருடைய கணவன் துரங்கேயும் ஆவர். விசாரணை தொடர்கின்றது வல்லரசுகளின் நெளிவு சுளிவுகள் வெளிவராமற்போகாது!

## தென் ஆபிரிக்கா

ஐ. நா. பாதுகாப்புச்சபை மீண்டும் தனது எதிர்ப்பையும் கண்டனத்தையும் வற்புறுத்தியதோடு, இன்று வெளிவந்திருக்கும் 'திருத்த நடவடிக்கைகள்' தென் ஆபிரிக்க அரசின் பிற்போக்கையும் இனவாதத்தையுமே தெளிவுபடுத்துகின்றதென ஏமாற்றம் தெரிவித்துள்ளது. இதேவேளையில் 700 அங்கத்தவர் கொண்ட "உலக மாநகர முதல்வர்கள் மாநாடு" 26 நாடுகள் சார்பில் தென் ஆபிரிக்காவுடன் எவ்வித வர்த்தக முதலீடும் செய்வதில்லை யென்றும், இனஒதுக்கலை முறியடிக்க ஆவன செய்ய வேண்டுமெனத் தீர்மானித்துள்ளது.

அமெரிக்காவின் நிலை இன்னும் சருகலாகவே இருக்கின்றது அமெரிக்க பொதுமக்கள் வெள்ளையரின் இனவெறி ஆட்சியைக் கண்டித்தபோதும், செல்வந்தர், பிரபல வர்த்தக நிறுவனங்கள் பல நொண்டிச் சாட்டுகளைச் சொல்லி பிற்றோறிய அரசை எதிர்க்கத் தயங்குகின்றனர்.

பிரிட்டனின் பெருத்த முதலீடுகளும். வர்த்தகத்தொடர்புகளும், தென் ஆபிரிக்காவை எதிர்க்கும் நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்க உதவா. அந்த நாட்டின் கறுப்பு மக்களுக்கு பொருளாதார பகிஷ்கரிப்பு பெரும் பாதகமாக முடியும் என்று சொல்வதே பிரிட்டனின் பகிரங்கப் போலிப் பிரசாரம்.

## பிரிட்டன்

மன்செஸ்டர் நகரிலிருந்து புறப்பட்ட போயிங் விமானம் (737) தீப்பிடித்து. எரிந்த போது பலர் இறந்ததாகக் கூறப்படுகிறது. கிரேக்க மத்தியதரைத் தீவான கோபுவுக்கு 131 பிரயாணிகளுடன்

(5-ம் பக்கம் பார்க்க)

## சரணடைந்தோம் சரவணனே!

அல்லல்தரும் அவலமெலாம் அறியும் முதலாம்
நல்லைநகர்க் கந்தனிடம் சரணாய் ஆவோம்
வெல்லவரும் வேலுடனே விளங்கும் வீரா!
நல்லமைதி நிலவிடவே அருள்வாய் என்றே!

ப மகேந்திரதாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமிரண்ணை நினைவே தோன்றும்!

கலையென்றால் பரதத்தின் நினைவே தோன்றும்
கல்லென்றால் வைரத்தின் நினைவே தோன்றும்
மலையென்றால் இமயத்தின் நினைவே தோன்றும்
மலரென்றால் கமலத்தின் நினைவே தோன்றும்
அலையென்றால் ஆழ்கடலின் நினைவே தோன்றும்
அறிவென்றால் அண்ணாவின் நினைவே தோன்றும்
தலையென்றால் விடுதலையின் நினைவே தோன்றும்
தலைவனென்றால் அமிரண்ணை நினைவே தோன்றும்.

கே. பி. நடனசிகாமணி

## எரிபொருள் கொள்ளை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் பஸ் காரியாலயமொன்றில் இரு தினங்களுக்கு முன் இனந்தெரியாதவர்களினால் ஒரு டிரம் டீசலும், ஒரு டிரம் பெற்றோலும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. (ஈ)

## சிவகுமாரன் நினைவு தினம்

(யாழ்ப்பாணம்)

உரும்பராய் தியாகி சிவகுமாரனின் பிறந்ததினம் இன்றாகும்.

பிறந்த தினத்தையொட்டி வேம்பன் மாயனத்தில் அமைக்கப்பட்டுள்ள அவரின் சமாதிக்கு இன்று மலர்கள் தூவி அஞ்சலி செலுத்தப்படும். (ஈ)




உடனே கறந்த பசுப்பாலின் ருசி!

பால் வெண்ணை கூடுதலாக உள்ளது!

இணையற்ற சக்தி மிக்க பால்!

## பனம்பொருள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பொருள் அபிவிருத்திச்சபை வளவில் உள்ள அவரது சுற்றுலா விடுதியில் இருந்தே அவர் கடத்திச் செல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது.

கல்வயலில் உள்ள அவரது வீட்டில் அவரது மகளை வானில் கூட்டிவந்து விடுதியில் இருமணிநேரம் தடுத்துவைத்திருந்ததாகவும், பின்னர்வெளியில் சென்ற திரு. நடராசா வந்தபோது விசாரணைக்கெனக் கூறி இருவரையும் கூட்டிச் சென்றதாகவும் நுணாவிலில் மகளை இறக்கி விட்டதாகவும் கூறப்படுகிறது.

நேற்று இரவு வரை திரு. நடராசா விடுதலைசெய்யப்படவில்லை. (ஈ)

## தென் பசுபிக்...

4-ம் பக்கத் தொடர்ச்சி)

புறப்பட்ட விமானம் தரையை விட்டுக் கிளம்பும்போதே தீப்பிடித்தது. 26 சடலங்கள்கண்டு பிடிக்கப்பட்டன இன்னும் பல கிடைக்குமென்றும் இது ஒரு பெரிய விபத்தென்றும் கருதப்படுகிறது. பிரயாணிகள் அனைவரும் விடுமுறையைக் கழிப்பதற்குப் புறப்பட்டவர்களே.

பிரதமர் திருமதி தாட்சரின் 6 வருட ஆட்சியில் வேலையின்மை இருமடங்கு அதிகரித்திருக்கிறது. ஆட்சிக்குண்டான இன்றைய நெருக்கடிக்கு இதுவே முக்கிய காரணம். அண்மைக்கால பிரிட்டனின் பொருளாதார வளர்ச்சி இவ்வருட முடிவில் வீழ்ச்சியடையும் எனப் பொருளாதார நிபுணர்கருதுகின்றனர். வேலையில்லாதவர் தொகை அடுத்த ஆண்டில் 330 லட்சத்துக்கும் அதிகமாகுமெனக் கணிக்கப்படுகிறது.

அரசின் முகாமையிலுள்ள ரயில்வே சேவைக்கு ஒரு பெரிய வேலைநிறுத்தம் அச்சுறுத்தலாகவிருக்கிறது: செலவைக் குறைக்கும் நோக்குடன் கார்ட் இல்லாத சாரதியின் தனிப்பொறுப்பிலே ரயில் ஓடும் திட்டத்துக்கு ரயில்வே தொழிற்சங்கம் பலத்த எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. எவ்விதத்திலும் அரசின் சிக்கனத் திட்டம் செயற்படுத்த வேண்டுமென திருமதி தாட்சர் அரசு பிடிவாதமாக நிற்கின்றது.

## கொந்தளிப்பில் மிதக்கும் உலகம்

எங்கு பார்த்தாலும் லத்தீன் அமெரிக்க நாடுகள், ஆபிரிக்க நாடுகள், மத்திய கிழக்கு நாடுகள், தென்பசுபிக் பிராந்தியம், இந்து சமுத்திரப்பிராந்திய நாடுகள் தம்மை ஆண்ட நாட்டினரை முன்மாதிரியாகக் கொண்டு அந்நாடுகளின் வளர்ச்சியினை அடைய இந்நாடுகள் இதற்கமையச் சுதந்திரத்தின் பின் ஆட்சி நடத்துபவர் விரும்பின: மக்களை மக்கள் பேரில் தூக்கி எறியும் இயல்புகளைக் கொண்ட போக்குடையவராகக் காணப்படுகின்றனர். ''நவீன மயமாக்கல்'' என்ற கானல் நீர். வசதிமிக்க நடுத்தர வர்க்கத்தினரையே செல்வர்களாக்கின்றது.

பாதிக்கப்பட்ட மக்களின் எதிர்ப்போக்கு, கொரில்லா யுத்தம், பயங்கரவயதம், அராஜகம்என்ற பல புனைபெயர்களாக குறிசுடப்பட்டு கொந்தளிப்பை வளர்த்துவருவது கண்கூடு.

## பொலிசாரும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பார்வையிட்டனர்.

நேற்றுப் பிற்பகல் 1-30மணியளவில் அவர்கள் ஹெலிகாப்டரில் அப்பகுதிகளுக்குச்சென்று மாலை 4 மணிவரை பாதிப்புக்குள்ளான சகல பகுதிகளையும் பார்வையிட்டனர்

[illegible]

## இப்படியும் நடக்கிறது

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் நேற்றைய (ஆறு மணி) மாலைச் செய்தி இது (தமிழ்):

''இன்று நடைபெற்ற ஒருநாள் சர்வதேசக் கிரிக்கெட் போட்டியில் இந்தியக் கோஷ்டியை இலங்கைக் கோஷ்டி இரண்டு விக்கெட்டுகளினால் தோற்கடித்தது...''

அதாவது... இலங்கைக் கோஷ்டி வெற்றி பெற்றது?

குறிப்பு: நேற்றைய கிரிக்கெட் போட்டியில் உண்மையில் வெற்றி பெற்றது இந்தியக் கோஷ்டி தான்!

★ ★ ★

எழுத்தாளர்கள், கவிஞர்கள், கலைஞர்கள் மற்றும் கலை, இலக்கிய, சரித்திரப் பிரியர்களுக்கு ஒரு நல்லசெய்தி!

உங்கள் கற்பனை சக்தியை வளர்க்க விரும்புகிறீர்களா?

ஒரு வானொலிப் பிரியர் கூறுகிறார்: தினமும் 'லங்கா புவத்' செய்திகளைக் கேளுங்கள்.

''ஊடுருவி''

## 26 தீவிரவாதிகள்.

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பந்தோபஸ்து படையினரை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்தபோது தற்பாதுகாப்புக்காக நடத்திய பதில் தாக்குதலில் 26 தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாகவும், இம்முகாம் ஈரோஸ், ரெலோ ஆகிய இயக்கங்களின் கூட்டுப் பயிற்சி நிலையங்களென்றும் அறிவிக்கப்பட்டது.

துப்பாக்கிச் சமரைத் தொடர்ந்து அங்கிருந்து துப்பாக்கிகள், எஸ். எல். ஆர் துப்பாக்கிரவைகள், உணவுப் பொருட்கள் பிரசுரங்கள், துப்பாக்கிப் பயிற்சி பெறுவோர்பற்றிய விபரங்கள் போன்ற பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் இச்சம்பவம்பற்றி மாஜிஸ்திரேட் மட்டத்திலான விசாரணைக்கு ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளதாகவும் அரசுதரப்பில் நேற்று அறிவிக்கப்பட்டது. (ரா)

## யாழ்தேவி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வல்கலைத் தொடர்ந்தே சில ரயில் நிலையங்களுக்கப்பால் யாழ்தேவிரயில் கட்டுப்பாட்டுப்பகுதியினரால் நிறுத்தப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

தொடர்ந்து பாதுகாப்புப் படையினர் குறிப்பிட்ட ரயில் நிலையங்களுக்கு அழைக்கப்பட்டபின்னர் யாழ்தேவி அந்நிலையங்களை வந்தடைய அனுமதிக்கப்பட்டது. இதனாலேயே சுமார் 3 மணிநேரம் தாமதித்து யாழ்தேவி யாழ்ப்பாணம் வந்தடைந்தது. (கி)

## சாரதி சுட்டுக்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வைக்கப்பட்டுள்ளது: லொறி பொலிஸ் பொறுப்பில் உள்ளது.

இச் சம்பவத்தில் காயமடைந்த லொறிக்கிளினர் எஸ். ராஜ்குமார் (கலட்டி) யாழ் ஆஸ்பத்திரிக்கு நேற்று நண்பகல் கொண்டுவரப்பட்டார்

வவனியா ஆஸ்பத்திரியில் இவர் அனுமதிக்கப்பட்டு அங்கிருந்து, யாழ். ஆஸ்பத்திரிக்கு கொண்டுவரப்பட்டார். இவருக்கும் கையிலும், தொடையிலும், பெருவிரலிலும் துப்பாக்கிச்சூட்டுக்காயம் ஏற்பட்டதாக கூறப்படுகிறது.

வவனியா சந்திக்கு சமீபத்தில் லொறியை ஆயுதப்படையினர் சோதனையிட்டபின் செல்ல அனுமதித்ததாகவும். சிறிதுதூரம் சென்றபின்னர் வெடிச்சத்தங்கள் கேட்டதாகவும், காயமடைந்த சாரதி சிறிதுதூரம் லொறியை ஓட்டிச் சென்று ஒரு வேலியில் மோதியபின் லொறி நின்றதாகவும் கூறப்படுகிறது.

வவனியா ஆஸ்பத்திரியிலுள்ள சாரதியின் சடலத்தை யாழ்ப்பாணம் கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஈ)

போதே வீடுகளை இழந்த மக்கள், பொலிசாரும், 'கமாண்டோப்' படைகளுமே தமது வீடுகளை எரித்தனர் என்று கூறினர். அமைச்சர் அம்மக்களுக்கு ஆறுதல் தெரிவித்ததுடன், சேதங்களுக்கான நஷ்ட ஈடு பெற்றுத்தருவதாகவும் உறுதியளித்தார். [கி]

## சென்னையில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளர் திரு. க. வீரமணி ஆகியோர் கலந்து கொண்ட இந்த ஊர்வலம் மயிலாப்பூர் திருவள்ளுவர் சிலை அருகேயிருந்து புறப்பட்டு அண்ணாசாலையிலுள்ள அண்ணா அறிவாலயம் அருகே முடிவடைந்தது.

## பாலசிங்கம் சந்திரகாசன்

நிலைமை இவ்வாறிருக்க இந்திய அரசினால் நாடுகடத்தப்பட்ட டாக்டர் எஸ். ஏ. பாலசிங்கம்நேற்று லண்டன்போய்ச் சேர்ந்துள்ளார் என்றும் திரு. எஸ். சி. சந்திரகாசன் நியுயோர்க் போய்ச்சேர்ந்துள்ளார் என்றும் உத்தியோகபூர்வமாக இந்திய அரசு அறிவித்துள்ளது. [ரா]

## மீனவர்கள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அம்மீனவர்கள் ஓடத்தொடங்கியதும் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததில் அம்மீனவர்களில் சிலர் இறந்ததாகவும் மற்றவர்கள் கைது செய்யப்பட்டதாகவும் அறியப்படுகிறது. (மா)

## இன்ரசிற்றி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் நின்று கொண்டு பயணத்தை மேற்கொண்டனர்.

இன்ரசிற்றியின் சகல ஆசனங்களும் பதிவு செய்யப்பட்டிருந்தன இதனால் ஆசனவசதி கிடைக்காத நூற்றுக்கும் அதிகமானபயணிகள் நின்றவாறு பயணம் செய்ய வேண்டியதாயிற்று.

இக்கடுகதி ரயிலில் இவ்வாறு பயணம்செய்வது வழக்கமல்ல. ஆயினும் மேலதிகபயணிகளின் தொகையைச் சமாளிக்கும்விதத்திலேயே இவ்வாறு அளவுக்கதிகமாக பயணிகள் அதில் செல்ல அனுமதிக்கப்பட்டனர். [கி]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்ப் பிரதேசங்களில்
# சாராய விற்பனை நிலையங்கள் அகற்றப்பட வேண்டும்
## 'ரெலோ' வேண்டுகோள்!

(யாழ்ப்பாணம்)

இலங்கை அரசிற்கு பெருமளவு வரியைச் செலுத்தி நிற்கும் சாராய விற்பனை நிலையங்களை தமிழ் பிரதேசங்களிலின்று அகற்றப்பட வேண்டியதும், கள்ளச் சந்தையில் தனிப்பட்டவர்களினால் இயக்கங்களின் பெயரைச் சாட்டியும்' ஒரு சில குழுக்களினாலும் விற்கப்படும் வெளிநாட்டு விலையுயர்ந்த குடிவகைகளும், ஹெரோயின் போன்ற போதை வஸ்துகளும் நிறுத்தப்பட வேண்டியது அவசியமாகும்.

தமிழ் ஈழ விடுதலை இயக்கம் விடுத்துள்ள பகிரங்க வேண்டுகோளில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த வேண்டுகோளில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

இத்தகைய பொருட்களினால் பெருமளவு பணத்தை இழக்கும் நுகர்வோர் அளவற்கு மீறிய போதையினால் சில குற்றச் செயல்களையும் புரிகின்றனர்.

அனைத்துத் தமிழ்ப்பகுதிகளிலும் ஸ்ரீலங்கா முதலாளித்துவ அரச நிர்வாகங்கள் சீர்குலைந்து வரும் இக்காலப்பகுதியில் அந் நிர்வாகங்களை புரட்சிகர நிலைப்பாடுகளுடன் ஓரளவுக்கேனும் கையேற்பது அவசியமும் கடமையுமாகும்.

கொலை, களவு, கற்பழிப்பு என்பன மட்டும் சமூக விரோதங்கள் எனக் கூறிக் கொண்டு சீர்திருத்த நிலைப்பாடுகளைக் கையாண்டால் போதாது. ஏலைய கடத்தல், போதைவஸ்து விற்பனவு, விருட்ச அழிப்பு, அதிக சினிமாக்கொட்டகைகள் வருகை என்பனவும் இன்றைய நாளைய சமுதாயப்பாதிப்பு நிகழ்வுகளாகும். அத்துடன் விடுதலைப் பாதையைத் திசை திருப்பும். மழுங்கடிக்கும் செய்கைகளுமாகும்.

அமெரிக்க ஏகாதிபத்தியம் தனது சந்தைகளை விஸ்தரிக்கும் நோக்குடன் செயற்பட இந்த தரகுமுதலாளித்துவ அரசு தனது உள்ளூர்ச் சந்தைகளில் விற்பனவுப் பொருளாகக்கொண்டு வரப்பட்ட வீடியோ நாடாக்கள் இன்று எமது பிரதேசங்களிலும் பெருகி எமது இளஞ்சந்ததியை கல்வியினின்றும், மக்களை போராட்ட திசைகோளினின்றும் அப்புறப்படுத்திவைக்கும் அவலநிலை ஏற்பட்டுள்ளது. இதனைப் பயன்படுத்த வேண்டிய வழிகளைக் கைவிட்டு முற்போக்குசிந்தனைகளை மழுங்கடிக்க முதலாளித்துவ சிந்தனையாளர்களினால் கையாளப்படும் 'ஆபாச சினிமா' வழிகளுக்கு கொண்டுவந்த அநாகரிகம் இன்று மூலைமுடுக்குகளிளெல்லாம் காணப்படும் மினி தியேட்டர்களையே சாரும். இத்தகைய கொட்டகைகளும் உடனடியாக நிறுத்தப்படுவதென்பதும் அவசியமே.

எமது பிரதேச வளங்கள் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டியதும் அத்தகைய வளங்களை நல்ல முறையில் பயன்படுத்த வேண்டியதும் எமது எதிர்கால நலனிற்கு உதவுவதாகும். எமது பிரதேச பசுமை வளங்களை குறுகிய மரத்தேவைகளுக்கும, நிலத்தேவைகளுக்கும் அழிப்பதென்பது நம்மை நாம் அழிப்பதற்கு ஒப்பாகும். 'சூழல் மாசாகும்' ஆபத்தான நிலைக்கு இட்டுச் செல்லும் விருட்ச அழிப்புக்கள் மக்கள் நலன் கருதி நிறுத்தப்படவேண்டும்.'' (க)

## சாதனை நிலைநாட்டினர்

(யாழ்ப்பாணம்)



கொக்குவில் இந்துக் கல்லூரியின் வருடாந்த விளையாட்டுப் போட்டிகளில் பதினேழு வயதுக்குட்பட்டோர் பிரிவில், செல்வன் பொன்னுச்சாமி பிரகலாதன் இவ்வருடம் தத்தி மிதித்துப் பாய்தலில் பல வருடங்களாக முறியடிக்கப்படாத சாதனையை நிலைநாட்டி 'சலேஞ்ஜ்' வெள்ளிக் கிண்ணத்தைப் பெற்றுள்ளார்.

கல்லூரியின் சிறந்த விளையாட்டு வீரர்களில் ஒருவரான பி. பிரகலாதன் 1983-ல் பதினைந்து வயதுக்குட்பட்டோர் பிரிவில் இலங்கைப் பாடசாலைகள் உதைபந்தாட்டச் சங்கத்தின் ஆதரவில் நடத்தப்பட்ட உதைபந்தாட்டப் போட்டியில் விளையாடி, கல்லூரிக்குச் சிறப்புத் தேடிக்கொடுத்திருக்கிறார்.

கடந்த வருடம், பதினாறுவயதுக்குட்பட்டோர் பிரிவில், பரிதி வட்டம் வீசுவதில் மூன்றாம் இடத்தைப்பெற்ற இவர், அதே வருடம் நீளப்பாய்தலில் முதலாம் இடத்தைச் சுவீகரித்துக்கொண்டார்.

விளையாட்டுத்துறையில் மட்டுமன்றிச் சாரணர் இயக்கத்திலும் சேர்ந்து கடந்த வருடம் பயிற்சி வகுப்பில் கலந்துகொண்டு திறமைச் சான்றிதழ் பெற்றுக்கொண்ட பிரகலாதன் கலைத்துறையிலும் ஆவல் கொண்டவர். மிருதங்கத்தில் 1981ல் வட இலங்கை சங்கீத சபையின் திறமைச் சான்றிதழ் பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## கப்பலில் சீனி வருகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள சீனித் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் முகமாக 1800 தொன் சீனி கப்பல் மூலம் இன்று வரவழைக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட உதவி உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி திரு பற்குணம் இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் உணவுப் பொருட்கள் போதியளவு கையிருப்பில் இருப்பதாகவும், நாளை மறுதினம் காங்கேசன் துறைக்கு வரும் நாசகாரிக்கப்பலில் மேலும் 1000 தொன் அரிசி கொண்டு வரப்படுவதாகவும் திரு. பற்குணம் தெரிவித்துள்ளார். (மா)

## ஓய்வு பெற்றார்



ஆசிரியை திருமதி தவமணி சுந்தரலிங்கம், 24 வருட ஆசிரிய சேவையின்பின் யாழ். கந்தர்மடம் மகாவித்தியாலயத்திலிருந்து ஓய்வு பெற்றுள்ளார். இவர் சாவகச்சேரி மாவட்ட நீதிபதி வி பி சுந்தரலிங்கத்தின் பாரியாராவர்

கலைமாணிப்பட்டம் பெற்ற இவர். கொழும்பு தொண்டர் வித்தியாலயம், கம்பளை சாஹிராக் கல்லூரி, முல்லைத்தீவு மகாவித்தியாலயம், திருமலை செல். சேவியர் வித்தியாலயம், திருமலை விக்னேஸ்வரா வித்தியாலயம். பருத்தித்துறை சித்திவிநாயகர் மகா வித்தியாலயம், சரவெட்டி பரிசுத்த இருதயக் கல்லூரி, கரணவாய் மகாவித்தியாலயம், கந்தர்மடம் மகாவித்தியாலயம் ஆகியவற்றில் கடமையாற்றியுள்ளார்.

ஜி சீ ஈ. வகுப்புகளின் தமிழ் இலக்கியம், இந்து சமயம் கலைப்பகுதி வரலாறு என்பனவற்றில் இவர் மாணவர்களுக்குத் தக்கபயிற்சி அளித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மகோற்சவம்

(சுண்டுக்குளி)

ஆனைக்கோட்டை ஸ்ரீ வரத விக்ன விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் இம்மாதம் 21-ந் திகதி புதன் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி எதிர்வரும் 29-ம் திகதி வியாழக்கிழமை ரதோற்சவமும் மறுநாள் தீர்த்த உற்சவமும் இடம்பெறும்


## ஏஜென்சிகள் தேவை

தமிழ்மக்களின் அபிமான தினசரியான "ஈழநாடு"வுக்கு பின்வரும் இடங்களில் ஏஜென்சிகள் தேவை

★ அனலைதீவு ★ புன்னாலைக்கட்டுவன்
★ விசுவமடு ★ நயினாதீவு ★ மிருசுவில்
★ அக்கராயன் ★ பரந்தன் ★ மயிலிட்டி
★ ஒட்டுசுட்டான் ★ கொக்குவில்

பொதுமுகாமையாளர்,
"ஈழநாடு", யாழ்ப்பாணம்.

[215]

## மேற்கு ஜேர்மன் பிரயாணம்.

02-09-1985 செல்வதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

மற்றும் பிரான்ஸ், இத்தாலி, கனடா, அவுஸ்திரேலியா, அமெரிக்கா பிரயாணங்கள் ஒழுங்குசெய்துதரப்படும்.


(மலேசியா செல்வதற்கு எம்மிடம் பாஸ்போட் தந்தவர்கள் உடனே தொடர்பு கொள்ளவும்.)

### லிப்ருஸ் லிமிட்டெட்

(TRAVEL DEPARTMENT)
70, ஸ்ரான்லி வீதி (R. G. BUILDING),
யாழ்ப்பாணம்.

## FASHIONABLE SUIT MAKERS

[நவீன அலங்கார உடைகள் தயாரிப்போர்]



★ திருமண உடைகள்
★ மேல்நாட்டு உடைகள்
★ சர்வாணி உடைகள்
★ சபா(f)ரி உடைகள் (SAFFARI)

### டிப்லோ ரெயிலேர்ஸ்,

60, நவீன சந்தை,
(மேற்குப் பக்கம்)
பெரிய கடை, யாழ்ப்பாணம்.

## யாழ். ஐக்கிய வியாபாரச் சங்கம் மக்கள் நிறுவனம்

மக்களின் ஒத்துழைப்பையும் பேராதரவையும் வேண்டிநிற்கிறது.

ஒன்றுபட்டால் உண்டே வாழ்வு ஒற்றுமை நீங்கின் அனைவர்க்கும் தாழ்வே.

## The Jaffna Co-operative Stores Ltd., 420, Hospital Rd., Jaffna.

Tel; 22438, 22370, 22537


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய பலன்

மாதம்: ஆவணி
திகதி: 10 (1985-8-24)
கிழமை: திங்கள்
திதி: ஏகாதசி பி. ப. வரை
நக்ஷத்திரம்: பூராடம்
பி. இ: வரை

மேடம்: எண்ணியது எண்ணியபடி நடக்கும். உத்தியோகத்தர்களாயின் நிர்வாகத் துறையில் முதலிடம் பெறுபவர் மக்கள் செல்வாக்கு மனதை குளிரவைக்கும்.

இடபம்: தூரத்துப் பயணம் துயரத்தைத் தரலாம். வருமானத்தில் வீழ்ச்சி தென்படும். வைத்தியச் செலவுகளுக்கும் இடமுண்டு.

மிதுனம்: காதலர்களுக்கு சுற்கண்டான தினம். குடும்பத்தில் குதூகலம் தென்படும். உறவினர்கள் ஆதரவும் உண்டு.

கடகம்: எண்ணியதில் தடைகள் தோன்றும். ஏமாற்றம் தாக்கும். நண்பர்களும் காலை வாரிவிடக்கூடும்.

சிங்கம்: நீண்டநாள் பிரச்சினையில் இன்று சமரச முடிவு காணப்படும். மற்றவர்கள் மத்தியில் நல்ல பெயரைச் சம்பாதித்துக்கொள்வீர்கள்.

கன்னி: மனதில் புதிய எண்ணங்கள் தலை தூக்கும். தொழிலில் துரித முன்னேற்றம் உண்டு. தொழில் துறையில் மாற்றமும் ஏற்படும்.

துலாம்: மதிப்பு உயரும், இல்லத்தில் இனிமை தவழும். அறிஞர்களின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். சகோதர சுகமும் உண்டு.

விருச்சிகம்: தம்பதிகளில் ரேகை படரும். எதிலும் தயக்கம் ஏற்படும். ஆதரவு கொடுத்தவரே முடிவில் கையை விரிக்கக்கூடும். நிதானம் வேண்டும்.

தனுசு: கவலையின் தாக்குதலால வேதனைப்படுவீர்கள். உடல்நலமும் சிறிது பாதிக்கப்படும் அவசரப்போக்கை தவிர்த்துக்கொள்ளவும்.

மகரம்: இருள்மண்டிக்கிடக்கும். இன்று ஏமாற்றம் தாக்கும். குடும்பத்தில் உள்ளவர்களின் உடல் நலம் பாதிக்கப் படலாம்.

கும்பம்: வாகனம் செலுத்துவோர் இன்று கவனம் வேண்டும். தாய்வழித் தனவரவிற்கு இடமுண்டு. கல்வித்துறையில் உற்சாகம் பிறக்கும்.

மீனம்: அறவழிகளை மனம் நாடும் பொதுவிவகாரங்களில் ஈடுபடுவதன்மூலம் பொருட் செல்வாக்கும் வளரும்: சுற்றுடனில் மதிப்பும் உண்டு.

திருமலை
— வே. ரவீந்திரன் —

# சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

சங்கரத்தை அருள்மிகு முருகமூர்த்தி கோயில் மகாகும்பாபிஷேக ஒரு வருட பூர்த்தியை முன்னிட்டு நாளை மஹாசங்காபிஷேகம் நடைபெறவுள்ளது. அன்றைய தினம் பகல் அன்னதானமும் வழங்கப்படும். (ச)

# ‘அமிரின்’ 58 வது பிறந்த தினம்

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக்கூட்டணி செயலாளர்நாயகம் திரு. அ. அமிர்தலிங்கத்தின் 58 - வது பிறந்த தினம் இன்றாகும்.

# மருந்து தட்டுப்பாடு

(மானிப்பாய்)

மானிப்பாய்கிராமசபையின் கீழ்இயங்கும் ஆனைக்கோட்டை ஆயுள்வேத வைத்தியநிலையத்தில் மருந்துத் தட்டுப்பாடு நிலவிவருவதால் இங்கு சிகிச்சைக்காகச் செல்லும் இப்பகுதி மக்கள் பெரும் ஏமாற்றத்துடன் வீடு செல்லவேண்டியுள்ளது.

பல வாரங்களாக இந்த மருந்துத்தட்டுப்பாடு இங்கு நிலவிவருவது குறிப்பிடத்தக்கது.

# ஓய்வு பெற்றார்

(மாவிட்டபுரம்)

மல்லாகத்தை சேர்ந்த திருமதி பாலாம்பிகை பாஸ்கரன் 28 வருட ஆசிரிய சேவையில் இருந்து ஓய்வு பெற்றார்.

மைசூர் பல்கலைக்கழகத்தில் பயின்று பின்பு கல்வித்துறையில் பட்டம் பெற்று சண்டிலிப்பாய் [illegible] மகாமியா கல்லூரியில் ஆசிரியராகசேர்ந்துபின் விமலகாமம் மகா வித்தியாலயம், மல்லாகம் மகா வித்தியாலயம் ஆகியவற்றில் கடமையாற்றி ஓய்வுபெறுகிறார்.

# ஆபிரகாம் இல்லம் முதலிடம்

[சுண்டுக்குளி]

யாழ்ப்பாணக் கல்லூரி கனிஷ்ட பாடசாலை இல்ல விளையாட்டுப்போட்டி கல்லூரி மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது.

பிரதம விருந்தினராக கல்லூரியின் முன்னைநாள் கனிஷ்ட பாடசாலை மேற்பார்வையாளரும் யாழ்ப்பாணக்கல்லூரியின் அமெரிக்கன் மிஷன் இயக்குனரின் நம்பிக்கை உறுப்பினருமான திரு கி. வி பவிகி கலந்து கொண்டார் விளையாட்டுப்போட்டிகளில் ஆபிரகாம் இல்லம் முதல் இடத்தையும் கேஸ்ரிங்ஸ் இல்லம் இரண்டாவது இடத்தையும் கிச்கொக் இல்லம் 3 வது இடத்தையும் பெற்றுக்கொண்டன.

# ஆஸ்பத்திரியில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

வேலணையைச் சேர்ந்த கனகராசா (17 வயது) என்ற இளைஞர், நச்சுத்திராவகம் அருந்தியநிலையில் நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வருகிறார்.

# முதலாவது இயக்குநர் சபைக் கூட்டம்

(சுண்டுக்குளி)

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தின் முதலாவது இயக்குநர் சபைக் கூட்டம் லயன்ஸ் தலைவர் திரு, டபிள்யூ என். தேவகடாட்சம் அவர்களின் தவமனை இல்லத்தில் நடைபெற்றது.

நடப்பு வருட உப செயற்குழுத் தலைவர்கள் ஏகமனதாக நியமனஞ் செய்யப்பட்டனர். பின்னர் இவ்வருடம் விசேடமாக நிதிசேகரித்தல் பற்றியும் சேவைத் திட்டங்கள் பற்றியும் ஆராயப்பட்டது அத்துடன் ‘ரொண்றீம்’ தொழில் நுட்ப நிலையக் கட்டிடம் இவ்வருட இறுதிக்குள் பூர்த்தியாகும்என எதிர்பார்ப்பதுடன் இலவச மருத்துவச் சிகிச்சை, இரத்த தானம் செய்தல், பாலர் பாடசாலை ஆசிரியர் பயிற்சி நெறி அளித்தல், கட்புலன், செவிப்புலன் சம்பந்தமான விசேட உதவிகள் புரிதல், தொழில் நுட்ப நிலையத்தில் இளைஞருக்குத் தேவையான பல வகுப்புகளை நடாத்துதல் போன்றவை பற்றி ஆலோசிக்கப்பட்டது.


நியூ சினிமாலயா
[R. G பில்டிங் மேல்மாடி]
10-30, 12-30, 2-30, 4-30, 6-30
Attack Force
புத்தம் புதிய பிரதி
பயங்கர தாக்குதல்கள் நிறைந்த படம்
பலரின் வேண்டுகோளுக்கு இணங்க திரையிடப் படுகின்றது

மே'ஃபெயர் மினி சினிமா
(கன்னாதிட்டி காளிகோவில் அருகில்)
10-30, 4-45, 7-00
“Basket Case”
தன் உடலில் ஒட்டிப் பிறந்த ஒரு அரை உருவம் கொண்ட பயங்கர ரகுலாவின் திகில் நிறைந்த கதை.

S.T.L. மினி சினிமா
திருநெல்வேலி
10-30, 2-15, 5-15
சிவாஜி. பானுமதி நடித்த
கள்வனின் காதலி
22, 23 திகதிகளில்
கமல், அம்பிகா நடித்த
உயர்ந்த உள்ளம்

“லதா” மினி
(சோண்டாவில்)
10-30, 3-30, 6-45
M.G.R; வையந்திமாலா
பக்தாத் திருடன்

சரவணபவன் மினி சினிமா
(பெருமாள் கோவிலுக்கும் - வெலிங்டன் சந்திக்கும் இடையில்)
4 x 4 திரையில்
10-30, 2-15, 4-30, 7-00
UNCOMMON VALOUR
கேணல் ஜேசன் ரொட்ஸ் என்பவர் வியட்நாமில் காணாமல்போன தன் மகனைத் தேடி கெரில்லா பயிற்சி பெற்ற வீரகளுடன் செல்கின்றார்; அங்கு நிகழும் மோதல்கள் எழுத்தில் வடிக்கமுடியாதவை; Hell Cats, Code Name Wild Geeseக்குப் பின் மீண்டும் ஒருவிருந்து Action-Packed-Adventure

உஷா மினி
இன்று மட்டும்
10 30, 2-30, 4-30, 6-30
CODE NAME WILD GEESE

லிபேர்ட்டி மினி
வெலிங்டன் சந்தி அருகாமை
10-30, 12-30, 2-30, 4-45
“HELLCATS”
வயது வந்தவர்கள் மட்டும்

ராலகன் V.V;
(சாந்தி முன்பாக)
Daily 5 Shows
Naked Fist
(Adult Only)

இரண்டாவது ஜனத்திரள் நிறைந்த வெற்றி வாரமாக காட்சியளிக்கிறது.
ஸ்ரான்லி மினி
“X5” திரைவானில்
10-30, 12-30, 2-30 4-30, 6-30
LAST ORGY
ஹிற்லர் ஆட்சியில் தீவிரவாத பெண்களுக்கு செய்த கொடுமைகளும் அவர்கள் படும் துன்பங்களையும் சித்தரிக்கும் படம்.
Adults only

வெலிங்டன்
10-30, 2-15, 4-15, 6-30, p.m.
26 ம் திகதி மட்டும்
புறூசிலி நடித்த
THE DRAGON·DIES HARD
கராட்டி Film
27 - 30 வரை
அந்த ஏழு நாட்கள்
[illegible] சினிமா
10-30, 2-30, 6-30
2-வது மாதமாக ஓடுகிறது!
சிவகராஜன், சிவச்சந்திரன், பூர்ணிமா ஜெயராம், லக்ஷ்மிதா, ஜெய்சங்கர் நடித்த
[illegible] மகேந்திரனின்
நீங்கள் கேட்டவை
[illegible]

நியூ சாந்தி மினி
10-30, 2-30, 4-30, 6-30
A Pair Girl
சதிக் கூட்டம் ஒன்று வேலைதேடி வருவதாக இளம் பெண்களை கூட்டி வந்து தகாதநடத்தையில் ஈடுபடவைக்கிறார்கள்; அவர்கள் முயற்சி பலித்ததா என்ன நடந்தது?
கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்.
(Adults only)



செல்வச் சந்நிதியில்
சகாய விற்பனை
29-8-85, 30-8-85 செல்வச் சந்நிதி முருகன் ஆலய தேர், தீர்த்தத் திருவிழாவில் தேர்முட்டிக்கருகாமையில் அமைந்துள்ள மில்க்வைற் விளம்பர விற்பனைக் காட்சிச்சாலையில் ரூபா 15/-ற்கு மில்க்வைற் தயாரிப்புகளை வாங்கும் அன்பர்களுக்கு
அழகிய முருகன் ஸ்ரிக்கர், பொலித்தின் பை, அறிவு நூல்கள், பொன் மொழி மட்டைகள், வீட்டுததோட்டத்திற்குரிய விதைகள் யாவும் இலவசமாக வழங்கப்படும்.
மில்க்வைற் தயாரிப்புகளின் மேலுறைகள் சேகரித்து வைத்திருப்போர் அங்கு கொடுத்து பெறுமதிவாய்ந்த பரிசுகளைப் பெற்றுக்கொள்ளலாம்.
மில்க்வைற் - யாழ்ப்பாணம்.

ROTARY FOUNDATION SCHOLARSHIP
FOR ROTARY DISTRICT 322
Applications are invited for the following Scholarships, from Rotary Club of Jaffna:-
1. Graduate Scholarships:-
AGE: 18 — 30
Bachelor's degree or equivalent prior to Commencement of Scholarship Studies.
2. Undergraduate Scholarships:-
AGE: 18 — 24
Two years university work prior to Commencement of Scholarship Studies.
3. Teacher Of The Handicapped Scholarships:-
AGE 21 — 50
For those who have been employed or engaged fulltime as teachers of the physically, mentally, handicapped.
(i) Applications Closing date:- 10-09-1985.
(ii) For details apply to:-
Dr. S. Sanmugalingam
DIRECTOR, INTERNATIONAL SERVICE
124, NAVALAR ROAD, JAFFNA.
(iii) Children and relations of Rotarians are not eligible for these Scholarships.
(248)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

# இளைஞர்கள் விடுதலை

(கிளிநொச்சி)

பரந்தன் உமையாள் புரத்தில் ஆயுதப்படையினரால் கைதானபோது தற்கொலை செய்துகொண்டவர், கண்டாவளையைச் சேர்ந்த செல்லையா யோகேஸ்வரன் என்று அவரது தந்தையார் எஸ். செல்லையா அடையாளம் காட்டியதைத் தொடர்ந்து சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

இவருடன் கைதான இளைஞர்கள் விடுவிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளை கிளிநொச்சி இ. போ. ச. டிப்போவுக்கு சமீபமாக கண்டிவீதியில் மரண தண்டனை விதிக்கப்பட்டவரின் சடலம் கிளிநொச்சி ஆஸ்பத்திரி பிரேத சாலைக்குக் கொண்டுவந்து சேர்க்கப்பட்டுள்ளது. சடலத்தை எவரும் இதுவரை அடையாளம் காட்டவில்லை.

# மின்சார ஊழியர் தாக்குதல்: தீவிரவாத இயக்கம் விசாரணை

[யாழ்ப்பாணம்]

யாழ். சுருநகரிலுள்ள வீட்டில் கடமைக்குச் சென்ற மின்சார ஊழியர் தாக்கப்பட்டது குறித்து விசாரணை நடாத்திய தீவிரவாத இயக்கமொன்று சுமுகமான முறையில் பிரச்னையைத் தீர்த்துவைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட வீட்டுக்காரர் ஏற்னவே மின் கட்டணநிலுவை செலுத்தாததைத் தொடர்ந்து, மின்சாரப்பகுதி ஊழியர்களால் அவ்வீட்டின் கடந்த 17-ம் திகதி மின்சாரம் துண்டித்ததைத் தொடர்ந்து வீட்டுக்காரர் ஊழியர்களைத் தாக்கினார்களாம்.

இதைத் தொடர்ந்து கடந்த நான்கு நாட்களாக அவ்வீதி மின்சார வெளிச்சமின்றி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதுசம்பந்தமாக தீவிரவாத இயக்கமொன்று தலையிட்டு, ஊழியர்களையும் வீட்டுக்காரர்களையும் விசாரணை செய்த பின்னர், வீட்டுக்காரர் ஊழியர்களிடம் மன்னிப்புக் கேட்கும்படி பணித்ததுடன் மேற்கொண்டு இப்பிரச்னை தொடராவண்ணம் சுமுகமாகத் தீர்த்து வைத்ததாகவும் அதனைத் தொடர்ந்து அவ்வீதியில் மின்சாரம் பாவனைக்கு விடும்படி சம்பந்தப்பட்ட ஊழியர்களைக் கேட்டதைத் தொடர்ந்து மின்சாரம் வழங்கப்படடதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா)

## யாழ் நகரில்
## வார இதழ் மீண்டும் வரும்

(கல்வியங்காடு)

'சுதந்திரன்' பத்திரிக்கை மீண்டும் வெளிவரவிருக்கிறது. சுதந்திரன் வாரஇதழ் முன்னர் அரசாங்கத்தால் தடை செய்யப்பட்டிருந்தது தெரிந்ததே.

நீண்டகாலமாக நிறுத்தப்பட்டிருந்த இப்பத்திரிக்கை வெளியிடுவது அவசியம் என அபிப்பிராயம் நிலவுவதால் அதனை வெளியிட ஆலோசிக்கப்பட்டு வருவதாகத் தெரிகிறது.

# இலங்கை - இந்திய கிரிக்கெட் பந்தயம்: ஒரு 'தமிழ்நாடு வெற்றி'!
## 242-வது ஓட்டத்தை சிவராமகிருஷ்ணன் பெற்றார்

(கொழும்பு)

நேற்று இடம்பெற்ற இலங்கை - இந்திய சர்வதேச மட்டுப்படுத்தப்பட்ட ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா வெற்றி பெற்றது. இந்தியாவின் 242-வது வெற்றி ஓட்டத்தை தமிழ்நாட்டு வீரர் லக்ஷ்மண் சிவராமகிருஷ்ணன் பெற்றுக் கொடுத்தார்.

கொழும்பு எஸ் எஸ். ஸி. மைதானத்தில் மிகவும் விறுவிறுப்பான முறையில் இப்போட்டி முடிவடைந்தது.

இப்பந்தயத்தின் ஆரம்பத்தில் இரு கோஷ்டிகளிடையேயும் 'பூவா-தலையா'வில் இந்தியா வெற்றிபெற்று, இலங்கையை துடுப்பெடுத்தாடப் பணித்தது.

இலங்கைக் கோஷ்டியின் ஆரம்ப துடுப்பாட்டக்காரர்களான, ரவி ரட்னாயக்காவும், அமல் டி சில்வாவும் ஓட்டங்களை மிகவும் மெதுவாகவே எடுக்கக்கூடிய விதமாக இந்தியக் கோஷ்டி வீரர்களின் பந்துவீச்சு அமைந்திருந்தது. இலங்கை கோஷ்டி தனது முதலாவது விக்கெட்டை இழக்கும் போது 17 ஓவர்களில் 34 ஓட்டங்களை மட்டுமே பெற்றிருந்தது.

இதன்பின் துடுப்பெடுத்தாடிய அமல் டி சில்வாவும், ரோய் டயஸும் ஓட்டங்களை சற்று வேகமாக எடுத்தார்கள். அமல் டி சில்வா 36 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இதன்பின் அர்ஜுண ரணதுங்கா ரோய் டயஸுடன் சோடி சேர்ந்ததும், ஓட்டங்களை 'மின்னல்வேகத்தில்' பெற்றனர் இவர்கள் ஒருகட்டத்தில் 37 ஓட்டங்களை 9 நிமிடத்தில் பெற்றனர். மதிய போசன இடைவேளையின் இலங்கைக்கோஷ்டி 3 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 33 ஓவர்களில் 122 ஓட்டங்களைப் பெற்றிருந்தது ரோய் டயஸ் 56 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது இருந்தார்.

ரோய் டயஸ் 51 ஓட்டங்களை 54 நிமிடங்களில் 51 பந்துகளைச் சந்தித்து பெற்றது சிறப்பம்சமாகும்.

தேனீர் இடைவேளைக்கு முன்பு இலங்கைக் கோஷ்டி 45 ஓவர்களில் 6 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 241 ஓட்டங்களைப் பெற்றது. ரோய் டயஸ் 81 ஓட்டங்களையும், அர்ஜுண ரணதுங்கா 61 ஓட்டங்களையும் பெற்றனர்.

இதன்பின் துடுப்பெடுத்தாடிய இந்தியக் கோஷ்டி ஓட்டங்களை வேகமாகப் பெற்றபோதும், இலங்கை வீரர்களின் அபாரப் பந்து வீச்சும், பந்து தடுப்பும் இந்திய வீரர்களை தடுமாறச் செய்தது.

இந்தியக் கோஷ்டியின் சார்பில் வெங்சாகர் 89 ஓட்டங்களையும், ரவி சாஸ்திரி 67 ஓட்டங்களையும் பெற்றனர் காப்டன் கப்பில்தேவ் 24 ஓட்டங்களை மட்டுமே பெற்றார். இப்போட்டி முடிவடைவதற்கு இரண்டு பந்து வீச்சுக்கள் இருக்கும் போது, இந்தியா 44.8 ஓவர்களில் 8 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 242 ஓட்டங்களைப் பெற்றது.

இப்போட்டியில், இலங்கை வீரர் ரோய் டயஸ் 'சிறந்த வீரருக்கான' பரிசைப் பெற்றது சிறப்பம்சமாகும்.

நேற்று இலங்கை அணி காப்டன் டுலீம் மெண்டிஸின் பிறந்த தினம் என்பது குறிப்பிடத்தக்கது. (வி)

# வெலிக்கடைச் சிறையில் உண்ணாவிரதமிருக்கும் தமிழ் இளைஞர்கள்
## நடவடிக்கை குறித்து யாழ். பல்கலைக்கழக மாணவர் ஆலோசனை

(யாழ்ப்பாணம்)

வெலிக்கடைச் சிறையில், சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கும் இளைஞர்களின் உணர்வுகளை உலகறியச் செய்யும் நோக்கமாக எடுக்கவிருக்கும் நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்காக சகல அமைப்புக்களையும் யாழ். பல்கலைக்கழக வளவில் இன்று பிற்பகல் 2 மணிக்கு ஒன்று கூடுமாறு யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது சம்பந்தமாக கலந்து ஆலோசனை நடாத்துவதற்காக யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் சகலரையும் இன்று காலை 9 மணிக்கு இராமநாதன் மண்டபத்தில் கூடுமாறு கேட்கப்பட்டுள்ளது

பயங்கரவாத தடைச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு 18 மாதங்களுக்கு மேலாக சிறைவைக்கப்பட்டிருக்கும் பல தமிழ் இளைஞர்கள் வெலிக்கடைச் சிறையில் கடந்த 8-ம் திகதி தொடக்கம் சாகும்வரை உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர்

(இன்றுடன் அவர்கள் 18வது நாளாக உண்ணாவிரதம் இருப்பது குறிப்பிடத்தக்கது)

யாழ். பல்கலைக்கழக வளவில் இன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவிருக்கும் ஆலோசனைக் கூட்டத்தில் குறிப்பாக சகல சனசமூக நிலையங்கள், பாடசாலை உயர்தர மாணவர் ஒன்றியங்கள், மற்றும் பொதுவான அமைப்புகளிலிருந்து இருவர் வீதம் கலந்து கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (மா)

## உமா டில்லியில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை, திரு. ராஜீவ் காந்தி 'திம்பு' பேச்சுக்கள் குறித்து நம்பிக்கை தளராதவராகவே காணப்படுகின்றார்.

நேற்று அவர் 'திம்பு' பேச்சுக் குறித்து கருத்து வெளியிடுகையில் அடுத்தவாரம் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பமாகும் என்று நம்பிக்கை தெரிவித்தார். அத்துடன் புதிய சில ஆக்கபூர்வமான யோசனைகள் முன்வைக்கப்படவுள்ளதாகவும் இந்தியப் பிரதமர் கூறினார். (கி)

# குணரத்தினம், நடராசா ஆகியோரை விடுதலை செய்யுமாறு மூன்று ஸ்தாபனங்கள் வேண்டுகோள்!

[யாழ்ப்பாணம்]

இனந்தெரியாத இளைஞர்களினால் அழைத்துச் செல்லப்பட்ட திரு சி. ஈ குணரத்தினம், பனம் பொருள் அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு க. நடராசா ஆகியோரை விடுதலை செய்யுமாறு மூன்று ஸ்தாபனங்கள் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளன

அநீதி ஒழிப்பு ஒன்றியம், தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்க வடமராட்சிக் கிளை, அ. இ சிறுபான்மை தமிழர் மகாசபை வடமராட்சி கிளையினர் இவ் வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

அந்த வேண்டுகோளில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

திரு சி. ஈ குணரத்தினமும் பனம்பொருள் அபிவிருத்தி சபைத்தலைவர் திரு. க. நடராசாவும் சில இளைஞர்களினால் அழைத்து செல்லப்பட்டு இதுவரை விடுவிக்கப்படவில்லை என அறிகிறோம்.

இவர்களிருவரும் வடபகுதியில் வாழுகின்ற தாழ்த்தப்பட்ட ஏழைமக்களின் கல்வி பொருளாதார சமூகவளர்ச்சிக்காகப் பாடுபட்டவர்களும். பல ஸ்தாபனங்களில் தலைமைப் பதவி வகித்து பல்துறைகளில் மக்களின் உயர்வுக்காக உழைத்தவர்களுமாவர்

திரு குணரத்தினம் எமது இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பைப் பெற்றுத்தருவதில் முன்நின்றவர்.

திரு க. நடராசா, தெங்கு ப. பொ. உ. வி. கூ. சங்கங்களின் ஸ்தாபகர்களில் ஒருவர் இத் துறையைக் கூட்டுறவு அமைப்பினூடாக வளர்ப்பதில் பெரும் பாடுபட்டவர். எனவே இவ்விருவரையும் அவர்களாற்றிய சேவைகருதி விடுவிக்குமாறு சம்பந்தப்பட்ட இளைஞர்களைத் தாழ்மையுடன் வேண்டுகிறோம். (க)

## 7 லட்சம் ரூபா என மதிப்பீடு

(வவனியா)

கண்டிவீதியில் உள்ள 'சிற்றிமில்'லில் சூறையாடப்பட்ட பொருட்களின பெறுமதி ஏழு இலட்சம் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளதாக இதன் உரிமையாளர் தெரிவித்தார்.

குறித்த அரிசி ஆலைப்பொருட்கள் அனைத்தும் சூறையாடப்பட்டவர்களினால் லொறிமூலம் ஏற்றிச்செல்லப்பட்டது தெரிந்ததே.

## பணத்தை இழந்தவரே செலுத்த வேண்டும்

(கல்வியங்காடு)

பணத்தைப் பறிகொடுத்த யாழ் மாநகர சபை ஊழியரே பதினாலாயிரத்தையும் செலுத்தவேண்டுமென உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அறிவித்துள்ளார்.

யாழ். மாநகரசபையின் வரியாட்டவரி உத்தியோகத்தர் ஒருவர் நகர எல்லைக்குள் உள்ள சினிமா தியேட்டர்களிலிருந்து வசூலித்த14 ஆயிரத்து 10 ரூபா 50 சதம் வரிப்பணத்தை ஆயுதம் தரித்த கோஷ்டியொன்று அபகரித்துச் சென்றதாம்.

1984-ம் ஆண்டு நவம்பர் மாதம், இச்சம்பவம் நடைபெற்றது.

பணத்தைப் பறிகொடுத்த உத்தியோகத்தரே அப்பணத்தைக் குறிப்பிட்ட கால எல்லைக்குள் கட்டவேண்டும் என்று உள்ளூராட்சி ஆணையாளர் பணித்திருப்பதாக யாழ். மாநகர சபை ஆணையாளர் உரியவருக்குக் கடிதமூலம் அறிவித்துள்ளார்.

## அரிசி மூடை அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி சைவசிறுவர் இல்லத்திற்கு வவனியாவைச் சேர்ந்த திரு சங்கரப்பிள்ளை, கோண்டாவிலைச் சேர்ந்த திரு வி. ரி. பாலசிங்கம் தலா ஒரு மூடை அரிசி வீதம் அன்பளிப்புச் செய்துள்ளார் இத் தகவலை மேற்படி இல்லத்தலைவர் திரு. எஸ் ஆர் சைவநாயகம் தெரிவித்துள்ளார். (ச)

## சுங்க அலுவலக கொள்ளை

[யாழ்ப்பாணம்]

யாழ். சுங்க இலாகா அலுவலகத்தில் பாவனையிலிருந்த பெற்றோல்மாக்ஸ், தட்டச்சு இயந்திரம், பழுதடைந்த மின்விசிறி கடதாசிப் பைகள் ஆகியன கடந்த புதன்கிழமை இரவு துப்பாக்கிமுனையில் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

இனந்தெரியாத கோஷ்டியினர் நேற்று முன்தினம் இரவு மூன்று தடவைகள் அலுவலகத்துள் புகுந்து சோதனையிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ். நகரில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

"தமிழகத்தில் கைது செய்யப்பட்ட டாக்டர் பாலசிங்கத்தை விடுதலை செய்"

"இந்திய அரசே அரைகுறைத்தீர்வுகளுக்கு வற்புறுத்தாதே"

"தமிழ்ப் போராளிகளை வெளியேற்றாதே" போன்ற சுலோகங்க அட்டைகளும் ஊர்வலத்தில் காணப்பட்டன.

ஊர்வலம் சுமார் 4 மணியுடன் முடிவுற்றது.

## வவனியாவில் எரிபொருள் கொள்ளை

(வவனியா)

வவனியா- மன்னார் வீதி சந்தியில் உள்ள தனியார் எரிபொருள் விற்பனை நிலையத்தில் கடந்த செவ்வாய் இரவு பெரும் தொகையான எரிபொருள்கள் கொள்ளை அடிக்கப்பட்டுள்ளன.

இனம் தெரியாத சுமார் 10 — 15 பேர் அடங்கிய ஒரு கோஷ்டியினரே இக் கொள்ளையினை நடத்தியுள்ளனர்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் [illegible] யாழ்ப்பாணம் [illegible] வீதி. [illegible] இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 26-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka. under number B 100236/81 [illegible] P. Box 49, Telegram Eelanadu, Telephone; 22389 ,[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org